வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 03.11.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 327 | பக்கங்கள் : 16

## வடக்கு மருத்துவர்கள் இன்று அடையாள வேலைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், நவ. 03

வடக்கு மாகாணத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து சனிக்கிழமை காலை 8 மணி வரை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரால் அடையாள வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

நாங்கள் பல மாதங்களாக மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேற இருக்கின்றமையையும் அது தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்னைகளையும் - அதை தடுப்பதற்குரிய வழிவகைகள் பற்றியும் ஆட்சியாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இருப்பினும், இதுவரை எந்தவிதமான சாதகமான

11

## கோணேஸ்வரத்தை பெருங்கோயிலாக புனரமைப்பதற்கு இந்திய அரசு உதவும்!

### இந்திய நிதி அமைச்சர் உறுதியளித்தார்

திருகோணமலை,நவ. 03

“திருக்கேதீஸ்வரம் ஆலயத்தைப் புனரமைத்துத் தந்ததுபோல் திருக்கோணேஸ்வரத்தையும் பெருங்கோயிலாக புனரமைக்கும் திட்டம் முன்வைக்கப்படுமானால் அதனை இந்தியா சாதகமாக பரிசீலித்து அதற்கு உத வும்.”என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா

11



# இந்து, இஸ்லாமிய தலங்களை அபகரிக்க தொல்பொருள் திணைக்களம் உதவுகிறது

## சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க குழு

நியூயோர்க், நவம்பர் 03

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச கட்டமைப்புகள், பௌத்த பிக்குகள் இணைந்து இந்துக்கள், இஸ்லாமியர்களின் வழிபாட்டு தலங்களை அபகரிப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் வசதி ஏற்படுத்துகின்றது என சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

நாட்டில் வாழும் சிறுபான்மையினரான இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமூகங்களுக்கான மீயுயர் மத சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில் அரசாங்கமானது தற்போது நடைமுறையிலுள்ள ‘ஒடுக்குமுறை’ கொள்கைகள் மற்றும் சட்டங்களை முற்றாக நீக்கவோ அல்லது

11

## அதீத போதைப் பாவனை இளைஞரின் உயிரை பறித்தது

யாழ்ப்பாணம், நவ. 03

ஐஸ் போதைப் பொருளின் அதீத பாவனையால் இளைஞர் ஒருவர் நெடுந்தீவில் உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞர் நெடுந்தீவு மேற்கை சேர்ந்தவர். இவர், வெளியூரில் வசிக்கும் தனது உறவினரின் வீட்டை பராமரித்து வந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை அந்த வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மரண பரிசோதனை அறிக்கையில், “ஐஸ் போதைப் பொருளை அதீதமாக நுகர்ந்துள்ளதால் உயர் குருதி அழுத்தம் ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## சீனிக்கான வரி ரூ.50ஆக உயர்வு

கொழும்பு, நவ. 03

சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த விசேட பண்ட வரி நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ள தாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி தற்போது ஒரு கிலோ சீனிக்கு விதிக்கப்படும் 25 சதம் வரி நேற்று முதல் 50 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சீனி மீது விதிக்கப்பட்டிருந்த விசேட பண்ட வரி அதிகரிக்கப்பால் சீனியின் விலை விரைவில் அதிகரிக்கப்படும் என்று தெரிகின்றது. (ஐ)

## இந்திய நிதி அமைச்சர் நிர்மலா இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

### பலாலி ஊடாக சென்னை செல்வார்



யாழ்ப்பாணம், நவ. 03

இலங்கை வந்துள்ள இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அவர் நல்லூர் கந்தன் ஆலயத்துக்கு சென்று பூசை வழிபாடுகளில் பங்கேற்கிறார். அதன் பின்னர் யாழ். நகரில் இந்திய அரச வங்கியின் (ஸ்டேட் பாங் ஒவ் இந்தியா)

11

## யாழ்ப்பாணம் வருகிறார் சீன தூதுவர் சென்ஹொங்



கொழும்பு, நவ. 03

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரும் இந்தக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர், மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாநகர சபை ஆணையாளர் ஆகியோருடன் உத்தியோக பூர்வ சந்திப்புகளை நடத்தவுள்ளனர்.

11

## மலையக தமிழ் மக்களுக்கு உறுதியுடன் 10 பேர்ச் காணி!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, நவ. 03

மலையகத்தில் கம்பனி நடைமுறைகள் இல்லாமல் செய்யப்படும். மலையக மக்களுக்கு பத்து பேர்ச் (ஒரு பரப்பு) காணி உறுதியுடன் வழங்கப்படும் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து மலையக மக்கள் இலங்கை வந்து 200 ஆண்டுகள் நிறைவுற்றதை கொண்டாடும் முகமாக “நாம் 200” நிகழ்வு நேற்று ஜனாதிபதி தலைமையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது.

11

## பௌத்த உறவை மேம்படுத்த 493 கோடி ரூபாய் அன்பளிப்பு!

### இந்தியா - இலங்கை ஒப்பந்தம்

கொழும்பு, நவ. 03

இலங்கை, இந்தியா இடையில் பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கம் ஒரு கோடியே 50 இலட்சம் டொலர் - சுமார் 493 கோடி ரூபாய் - அன்பளிப்புடன் முன்னெடுக்கும் திட்டங்கள் தொடர்பில் இரு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

நாட்டுக்கு வந்துள்ள இந்திய நிதி அமைச்சர்

11

## 17 பல்கலைக்கழகங்களில் நேற்று பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 03

பல்கலைக்கழகங்களின் வளப்பற்றாக்குறை, பிரச்னைகளை முன்வைத்து 17 அரச பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அரச பல்கலைக்கழகங்களின் கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

11

## வடக்கு மாகாணத்தின் வீதிகள் டிசெம்பருக்குள் திருத்தப்படும்!

### உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, நவ. 03

வடக்கு, வட மத்திய மாகாணங்களில் திருத்தியமைக்கப்பட வேண்டிய வீதிகள் அடையாளம் காணும் பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த மாகாணங்களில் இந்த வருட நிறைவுக்குள் பணிகள் பூர்த்தி செய்யப்படும் - என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர இதனை

11

# காக்கைதீவு - சாவல்கட்டு மீனவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

யாழ்ப்பாணம், நவ. 03

யாழ்ப்பாணம், காக்கைதீவு மற்றும் சாவல்கட்டு கடற்றொழிலாளர்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இரண்டு தரப்பினருக்கும் இடையில் அண்மைக்காலமாக நிலவிவந்த தொழில்சார் முரண்பாடுகளை தீர்த்து வைக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

காக்கைதீவில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் இறங்கு துறை மற்றும் மீன் விற்பனை சந்தை போன்றவற்றை பகிர்ந்து கொள்வதில் முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் சுமூகமான தீர்விற்கு சம்மந்தப்பட்ட இரண்டு தரப்புக் கடற்றொழிலாளர்களும் சம்மதம் தெரிவித்த நிலையிலேயே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர், மானிப்பாய் பிதேச சபை செயலாளர், கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஜெ. சுதாகர், காக்கைதீவு மற்றும் சாவற்கட்டு கடற்றொழிலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முகநூல் பக்கம் முடக்கம்!

யாழ்ப்பாணம், நவ. 03

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முகநூல் பக்கம் முகநூல் நிறுவனத்தினால் முடக்கப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஒளிப்படங்களை பகிர்ந்தமையால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முகநூல் பக்கம் முடக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்தார்.

இதனை அடுத்து நேற்று முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய முகநூல் பக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. (அ)

# சித்தங்கேணியில் பணம், நகை திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 03

சித்தங்கேணியில் வீடொன்றில் 6 பவுண் நகை மற்றும் 30 ஆயிரம் ரூபாய் பணம் என்பன திருட்டு போயுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வயதான இருவர் வசித்து வந்த வீட்டில் நேற்று முன்தினம் அதிகாலை வேளை இந்தத் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பட்ஜெட் உள்ளடக்கங்களைப் பார்த்தே ஆதரவளிப்பது தொடர்பில் தீர்மானம்!

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, நவ. 03

வரவு-செலவுத் திட்ட உள்ளடக்கங்களைப் பார்த்தே ஆதரவளிப்பது தொடர்பில் முடிவெடுப்போம் என பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கியதாலேயே பிரச்னை ஏற்பட்டது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கின்றார். அதனால் வரவு - செலவுத் திட்ட உள்ளடக்கங்களைப் பார்த்தே ஆதரவளிப்பது தொடர்பில் முடிவெடுப்போம்.

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் சிறிலங்கா பொது ஜன பெரமுன இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை.

வரவு - செலவுத் திட்டம் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்ட பின்னர் அதில் உள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டே முடிவு எடுக்கப்படும்.

அரசியல் நோக்கங்களுக்காக அன்றி, நாடு தொடர்பாகச் சிந்தித்தே தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (அ)

# இப்படியும் நடக்கிறது

இன்றைய இந்தப் பத்தியை ஊர்க்குருவி எழுதப்போவதில்லை.

முகநூலில் ஒருவர் தான் படித்ததில் பிடித்தது என்ற குறிப்புடன் இதனை பதிவு செய்திருந்தார். இதனை எழுதியவர் யார் என்பதை அவர் குறிப்பிடவில்லை. எழுதியவருக்கு நன்றிகள்.

இனி அந்தப் பதிவை அப்படியே கீழே தருகின்றேன்.

"ஆசிரியர் - "ரணில்! எங்கள் சம்பளத்தை ரூ. 60 ஆயிரமாக ஆக உயர்த்து"

ரணில் - "உனக்கு இப்போ மாசம் எவ்வளவு சம்பளம்?"

ஆசிரியர் - "50 ஆயிரம்"

ரணில் - "ஒரு வருசத்தில எத்தனை நாட்கள்?"

ஆசிரியர் - "365"

ரணில் - "அதில உனக்கு சனி, ஞாயிறு லீவு. வருசத்தில 104 நாளைக் கழி"

ஆசிரியர் - "261"

ரணில் - "அதில தவணைப் பரீட்சை முடிஞ்சதும் வாற லீவு மொத்தம் 10 வாரம். அதில ஏற்கனவே சனி, ஞாயிறு கணக்கில எடுத்ததால அதைக் கழிச்சா 56 நாட்கள். இதை 261இல் கழிச்சா எவ்வளவு நாள் வருது?"

ஆசிரியர் - "205"

ரணில் - "அதில ஒரு 10 பௌர்ணமி நாட்களும் வரும் அதையும் கழிச்சா எவ்வளவு நாள் வருது?"

ஆசிரியர் - "195"

ரணில் - "எல்லோருக்கும் எட்டு மணித்தியாலம் வேலை, உனக்கு மட்டும் ஆறு மணித்தியாலம். அதில அசெம்ப்ளி, இன்டெர்வல், ஒரு ப்றீ (சுசநந) பாடம். அதுக்கெல்லாம் ஒரு மணித்தியாலத்தை கழிச்சா 5 மணித்தியாலம். இப்ப 195 ஐ 5 ஆல பெருக்கி 8ஆல பிரிச்சு எவ்வளவு வருதுன்னு சொல்லு"

ஆசிரியர் - "கிட்டத்தட்ட 122 நாட்கள்"

ரணில் - "அதில ஒரு 8 ஏனைய விடுமுறை நாட்களும் வரும், அதையும் கழிச்சா எவ்வளவு நாள் வருது?"

ஆசிரியர் - "114"

ரணில் - "அதில ஒரு 24 விடுமுறை நாட்கள் ஆசிரியர் லீவு எடுக்கலாம் அதையும் கழிச்சா எவ்வளவு நாள் வருது?"

ஆசிரியர் - "90"

ரணில் - "90ஐ 30ஆல பிரிச்சு எத்தனை மாசம் வருதுன்னு சொல்லு"

ஆசிரியர் - "கிட்டத்தட்ட 3 மாசம்"

ரணில் - "வருசத்துக்கு இப்போ உனக்கு எவ்வளவு சம்பளம் கிடைக்குது?"

ஆசிரியர் - "6 இலட்சம்"

ரணில் - "அதை மூன்று மாசத்தால பிரிச்சா ஒரு மாசத்துக்கு இரண்டு இலட்சம். ஆமா நீ எவ்வளவு சம்பளம் கேட்ட?"

ஆசிரியர் - "அறுபதாயிரம்"

ரணில் - "அப்போ இரண்டு இலட்சத்துல அறுபதாயிரம் போனால் மீதி நீ அரசாங்கத்துக்கு கொடுக்க வேண்டியது ஒரு லட்சத்து நாற்பது ஆயிரம். அதை எப்போ திருப்பித் தரப்போறா?"

இதுதான் முகநூலில் நண்பர் பதிவு செய்திருந்த சம்பாஷணை.

ஜனாதிபதி ரணில் ஒரு விடயத்தை விட்டுவிட்டார் என்பது மட்டும் ஊர்க்குருவிக்கு உறுத்தியது.

வருடத்தில் ஐந்து அல்லது ஆறு நாட்கள் எமது அரசியல் கட்சிகள் நடத்தும் ஹர்த்தாலை மறந்து விட்டாரா? அல்லது ஹர்த்தால் நடப்பது தெரியாதோ என்னவோ?

- ஊர்க்குருவி

# பொதுஜன பெரமுன கட்சியை ஆட்டிப்படைக்கும் கர்மவினை

## சாடுகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, நவ. 03

"நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட மொட்டு கட்சியினர் கர்மவினையை அனுபவித்துவருகின்றனர். கூட்டணி கலாசாரம் பற்றி தற்போது கதைக்கும் அவர்கள் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் அதனை மறந்தே செயற்பட்டனர்." - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீர வன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூட்டணியாக செயற்படும்போது பங்காளிக்கட்சிகளினதும் ஆலோசனையை பெற்று, அதற்கமைய செயற்படுமாறு ஜனாதிபதிக்கு நாமல் ராஜபக்ஷ அறிவுரை வழங்கியுள்ளார். ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிகாலத்தில் கூட்டணி அரசியல் கலாசாரம் பற்றி அவர்களுக்கு தெரிந்திருந்தால் அந்த ஆட்சிதான் இன்றும் நீடித்திருக்கும். நாமலின் கருத்தை கேட்கும்போது சிரிப்புதான் வந்தது. அதுதான் கர்மவினை.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை எப்படியாவது ஒத்திவைத்து ஆட்சியை தக்கவைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார். அதற்காக சலுகை அறிவிப்புகள் வெளிவருகின்றனர். இப்படியான தற்காலிக நடவடிக்கைகளால்தான் நாடு நாசமானது. எனவே, புதிய அரசியல் பயணத்துக்கு மக்கள் தயாராக வேண்டும்- என்றார் விமல். (அ)



ஈழநாடு
Eelanadu
03.11.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கலக்கமடைகின்றனவா தமிழ் தேசியவாத கட்சிகள்?

உள்ளூராட்சி தேர்தலை காரணம் காண்பித்து - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிளவு ஏற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னத்துக்கு உரிய கட்சியான இலங்கை தமிழரசு கட்சி - தேர்தல் முறைமையை முன்வைத்து தனித்து போட்டியிடும் தீர்மானத்தை அறிவித்தது. உள்ளூராட்சி தேர்தல் என்பதால் வெள்ளோட்டம் ஒன்றை ஓடிப் பார்ப்பதில் கட்சிகள் மத்தியில் தடுமாற்றங்கள் இருக்கவில்லை. உளளூராட்சித் தேர்தலில் தங்களின் செல்வாக்கை எடைபோட முடியுமென்றே அனைவரும் எண்ணினர் - ஆனால், தற்போது நிலைமைகள் தங்களுக்குப் பாதகமாகிவிடுமோ - என கட்சிகளின் தலைவர்கள் அச்சப்படுவதுபோல் தெரிகின்றது.

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்ற பின்னர் - விரைவாக பாராளுமன்ற தேர்தலொன்றை நாடு எதிர்கொள்ளவுள்ளது. உள்ளூராட்சி தேர்தல் நிச்சயம் இடம்பெறுவதற்கான வாய்ப்பில்லை. ஜனாதிபதி - மற்றும் பாராளுமன்றம் இவைகள் உறுதியான நிலையை அடைந்த பின்னரே ஏனைய தேர்தல்கள் நடைபெறும். இந்த நிலையில் கட்சிகளின் தலைவர்கள் பலர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நிலையில் தங்களின் வெற்றி வாய்ப்பு தொடர்பில் கலக்கமடைந்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது. இதனால், கூட்டணியில் இருப்பவர்கள் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கினால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், தாங்களாக இதனை கூறாமல் மற்றவர்களைக் கொண்டு பேச வைப்பதற்கும் அவர்கள் முயற்சிக்கக்கூடும்.

தமிழ்த் தேசியவாத கட்சிகள் அனைத்துமே தேர்தல் மைய கட்சிகள்தான். தேர்தல் வெற்றியில்லாவிட்டால் தங்களால் அரசியலில் நிலைகொள்ள முடியாதென்பதில் அனைவருமே தெளிவாக இருக்கின்றனர். இந்த நிலையில் பாராளுமன்றத் தேர்தலை தனித்தனியாக எதிர்கொண்டால் - நிச்சயமாக, தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற சிலர் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பில்லை.

இதேவேளை தமிழ் தேசியவாத கட்சிகள் தனித்தனியாக போட்டியிட்டால் - அரசாங்கத்துடன் இணைந்து செயல்படும் தமிழ் கட்சிகள் பலமடைவதற்கான வாய்ப்பே அதிகம் உண்டு. 2020இல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மோசமான பின்னடைவுகளை சந்தித்திருந்தது. அரசாங்க ஆதரவு தமிழ் கட்சிகள் கூடுதலான ஆசனங்களை பெற்றிருந்தன. மொட்டு சின்னத்தில் போட்டியிட்ட ஒருவர் மட்டக்களப்பில் வெற்றிபெறும் நிலைமை உருவாகியது. தமிழ்த் தேசியவாத கட்சிகளைப் பொறுத்தவரையில் இது மோசமானதொரு பின்னடைவாகும்.

இவ்வாறான பின்புலத்தில்தான் தற்போது பாராளுமன்ற தேர்தலை கருத்தில் கொண்டு கலக்கமொன்று ஏற்பட்டிருக்கின்றது. தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து செயல்படுவதில் பிரச்னையில்லை. ஆனால், கட்சிகளின் தலைமைகள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் மக்களை முட்டாளாக்கும் நோக்கில் அமையக்கூடாது.

ஓர் ஐக்கிய முன்னணி தொடர்பில் கட்சிகளின் தலைவர்கள் சிந்திப்பார்களாயின் அதில் தவறில்லை. அதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால், வெறுமனே ஒரு சிலரின் தேர்தல் வெற்றியை கருத்தில் கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்படுமாயின் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. தமிழ் தேசியவாத கட்சிகள் மேற்கொள்ளும் தீர்மானமானது குறுகிய கால - நீண்டகால அடிப்படையில் மக்களின் நலனை கருத்தில்கொள்வதாக இருக்க வேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*“எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்.”*

**- தோமஸ் ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)**



# மலையக மக்களின் தேவைகளை நிறைவேற்ற இந்திய அரசு தயார்!

## இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்



கொழும்பு, நவ. 03

மலையக மக்களின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்ற இந்திய அரசாங்கம் தயாராகவுள்ள தென நாம் 200 நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

மலையக மக்கள் இலங் கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு “நாம்-200” நிகழ்ச்சி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டார். இதன்போது உரை யாற்றுகையிலேயே இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மலையக மக்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கில் ஆசிரியர் பயிற்சி வழங்கல் செயல் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

இந்திய நிதியுதவியின் கீழ் 4ஆம் கட்டமாக 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு இன்று (நேற்று) அடிக்கல் நாட்டப்பட்டது.

இலங்கை - இந்தியா வுக்கு இடையிலான இணைப்புப் பாலமாக மலையகத் தமிழர்கள் திகழ்வார்கள் - என்றும் கூறினார். (ஐ)

# நிலந்தவுக்கு எதிராக ஒழுக்காற்று; அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு!

கொழும்பு, நவ. 03

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள அரச புலனாய்வு சேவையின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான விரிவான அறிக்கையை டிசெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு உயர் நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

இது தொடர்பான அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# 5,150 போதைமாத்திரைகளுடன் மன்னாரில் ஒருவர் சிக்கினார்!



மன்னார், நவ. 03

மன்னாரில் நீண்ட காலமாகப் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த நபரை நேற்று முன் தினம் இரவு பொலிஸார் கைது செய்தனர்.


பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்தே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது குறித்த நபரிடமிருந்து இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்ட 5,150 போதைப்பொருள் மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாகத் கூறப்பட்டது.

இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



நவம்பர் - 03 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - ஐப்பசி 17
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சஷ்டி




**மேடம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல் லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**மிதுனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். தலைசுற்றல் முழுங்கால் வலி வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல் பட வேண்டிய நாள்.

**கடகம்**

கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். ஊழியர்களால் பிரச்னைகள் வந்து விலகும். கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். பாராட்டப் படுவீர்கள். சிறப்பான நாள்.

**கன்னி**

தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**துலாம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று வியாபாரத்தில் வேலையாட்களிடம் விட்டு கொடுத்து போவது நல்லது. உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டிய வரும்.

**தனுசு**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்களை வாங்குவீர்கள்.வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள்.

**மகரம்**

சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். அமோகமான நாள்.

**கும்பம்**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**

முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

# நடிகர் விஜய் போன்றவர்கள் அரசியலுக்கு வரவேண்டும்!

## பா. ஜ. க. தமிழக தலைவர் அழைப்பு

*சென்னை, நவ. 03*

30, 40 ஆண்டுகளாக பழையவர்களே இருக்கிறார்கள் புதியவர்கள் அரசியலுக்கு வர வேண்டும். விஜய் போன்றவர்கள் அரசியலுக்கு வந்து தனது கருத்தை நிலைநாட்ட வேண்டும் என செய்தியாளர்கள் சந்திப்பில் தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை கூறினார்.

மேலும், யார் அரசியலுக்கு வந்தாலும் வரவேற்பேன் என்று முதலிலேயே சொல்லியிருக்கிறேன். மக்களை மேம்படுத்துவதற்கு யார் வந்தாலும் வாங்க. நான் இதைப் பண்ண போறேன். இந்த மாதிரி செய்யப் போகிறேன் என்று மக்களுக்கு தெரிவியுங்கள் மக்கள் தெரிவு செய்யட்டும்.

புதியவர்கள் அரசியலுக்கு வருவதற்கு யாருமே தடையாக இருக்கக்கூடாது. ஜனநாயகத்தில் மக்களுக்கு தெரிவுகள் இருக்க வேண்டும். 3 கட்சி இருப்பதற்கு 6 கட்சி இருந்தால் இன்னும் சிறப்புத்தான். மக்கள் தெரிவு செய்வாரகள். 30, 40 ஆண்டுகளாக பழையவர்களே இருக்கிறார்கள் புதியவர்கள் அரசியலுக்கு வர வேண்டும்.

விஜய் போன்றவர்கள் அரசியலுக்கு வந்து தனது கருத்தை நிலைநாட்ட வேண்டும். எல்லாருடைய சித்தாந்தத்தையும் மக்கள் பார்த்து முடிவு செய்து கொள்ளட்டும் - என்றார்.

(ஐ)

# கொடிக்கம்பம் நிறுவ முயற்சி; 1,540 பா. ஜ. கட்சியினர் கைது!

*சென்னை, நவ. 03*

தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தபடி 100 நாட்களில், 10,000 கொடிக்கம்பம் நிறுவும் பணியை அக்கட்சியின் நிர்வாகிகள் நேற்று முன்தினம் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கினர். இதற்கு அனுமதி அளிக்காத பொலிஸார் விதிகளை மீறி கொடிக்கம்பம் நிறுவ முயன்ற ஆயிரத்து 540 பேரை கைது செய்தனர்.

சென்னை அடுத்த பனையூரில், தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை வீடு முன் கட்சி நிர்வாகிகள் கடந்தமாதம் 20ஆம் திகதி, கொடிக்கம்பம் வைக்க முயன்றனர். இது சர்ச்சையானது. இதையடுத்து நவம்பர் முதல் 100 நாட்களில் தமிழகம் முழுவதும் 10 ஆயிரம் கொடிகம்பங்கள் நாட்டப்படும் என்று பா. ஜ. க. அறிவித்தது.

இதன்படி, நேற்று முதல், மாநிலம் முழுதும் கொடிக்கம்பம் நிறுவும் பணியை பா. ஜ. கவினர் தொடக்கினர். கொடிக்கம்பம் நட பொலிஸார் அனுமதியளிக்கவில்லை. மீறி கொடிக்கம்பங்களை நிறுவ முயன்ற பா. ஜ. கவினர் ஆயிரத்து 540 பேரை தமிழகம் முழுவதும் பொலிஸார் கைது செய்தனர்.

இதைத் தொடர்ந்து வீதி மறிப்பு போராட்டங்களில் பா. ஜ. கவினர் ஈடுபட்டனர். இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட 25 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து, அண்ணாமலை தெரிவித்த, 100 நாட்களுக்குள், 20 ஆயிரம் கொடிக்கம்பங்கள் நிறுவப்படும் என்று கரு.நாகராஜன் தமிழக பா.ஜ. கட்சியின் துணை தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# “தமிழ் என்ற அடையாளத்தை தமிழ்நாடு இழப்பதை தடுங்கள்”

*சென்னை, நவ. 03*

தமிழ் என்ற அடையாளத்தை தமிழ்நாடு இழந்து வருவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்ட பதிவில்,

மொழிவாரி மாநிலங்கள் தத்துவத்தின் அடிப்படையில் சென்னை மாகாணம் பிரிக்கப்பட்டு தமிழ்நாடு உருவாக்கப்பட்ட நாளான நவம்பர் முதலாம் திகதிதான் உண்மையான தமிழ்நாடு நாள். இந்த நாளில் தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும் எனது தமிழ்நாடு நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது அதை நாம் சகோதர உணர்வுடன் ஏற்றுக் கொண்டோம். நமது நிலப்பரப்பை சகோதர மாநிலங்களுக்கு விட்டுக் கொடுத்தோம். நம்மிடமிருந்து நிலத்தை பெற்றுக் கொண்ட திராவிட மாநிலங்கள் எதுவுமே நமக்கு நீரைக் கூட தர மறுக்கின்றன. அதனால் தான் கூறுகிறேன்... மொழிவாரி மாநிலங்களால் நாம் அடைந்ததை விட இழந்தது அதிகம். நாம் இழந்த உரிமைகள் உள்ளிட்ட அனைத்தையும் மீட்டெடுக்க இந்த நாளில் உறுதியேற்போம்!

தமிழ்நாட்டின் இன்றைய நிலப்பரப்பு தமிழர்களின் மாநிலமாக 01.11.1956 அன்று நடைமுறைக்கு வந்த நிலையில், இந்த நாளையே தமிழ்நாடு நாளாக கொண்டாட தமிழக அரசு முன்வர வேண்டும். தமிழ்நாடு என்றால் தமிழ் என்ற அடையாளத்தை தமிழகம் இழந்து வருவதையும் மதுவுக்கு அடிமையாகி குடிகார மாநிலம் என்று தூற்றப்படுவதையும் தடுத்து நிறுத்தி, தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்தவும் இந்த நாளில் நாம் உறுதி ஏற்க வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# சிறுபான்மையினர் என்று எவரும் இந்தியாவில் இல்லை!

## தமிழ்நாடு ஆளுநர் ரவி

*சென்னை, நவ. 03*

இந்தியாவில் சிறுபான்மையினர் என யாரும் இல்லை அனைவரும் இந்தியர்கள்தான் என்றும் ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்தார்.

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நாள் விழா ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றிய ஆளுநர் ரவி, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலங்களிலும் வெவ்வேறு மாநிலங்களை சேர்ந்த ஏராளமானோர் வசித்து வருகின்றனர். நம் நாட்டைப் பொறுத்தவரை பெரும்பான்மை, சிறுபான்மை என யாரும் இல்லை. அனைவரும் இந்தியர்கள்தான். இந்த நாடு எனும் குடும்பத்தின் பிள்ளைகளாக நாம் உள்ளோம். நாட்டை சிறப்பாக நிர்வகிக்க ஏதுவாக மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அந்த நாளை கொண்டாடுவது மகிழ்ச்சி தருகிறது - என்றார்.

(ஐ)

# வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அஸ்வெசும நன்மை அதிகரிக்கப்படும்!

## பிரதமர் தினேஷ் உறுதி



**கொழும்பு, நவ. 03**

**குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அஸ்வெசும நன்மைகளை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

அநுராதபுர விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நன்மைகள் திட்டத்தில் நிலவும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண, நவம்பர் 6 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை அஸ்வெசும வாரத்தை நடைமுறைப்படுத்த நிதியமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக அஸ்வெசும நிவாரண பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நன்மைகள் தாமதமான குடும்பங்களுக்கும், உடனடியாக நன்மைகளை வழங்க முடியும் - என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# மாணவர்களுக்கான பயிற்சி புத்தகங்களுக்கு 30வீத கழிவு

*கொழும்பு, நவ. 03*

பாடசாலை அதிபர்களின் பரிந்துரையின் பேரில் பாடசாலை மாணவர்களுக்கு 30 வீத சலுகை விலையில் பாடசாலை பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன என்று அரச அச்சக சட்டப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத்தின் தலைவர் நிமல் தர்மரத்ன தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் யோசனைக்கு அமைவாக, பயிற்சிப் புத்தக விற்பனைக்கான சலுகை வழங்கும் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி புத்தகங்களை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, பாடசாலை தலைமையாசிரியரின் பரிந்துரைக் கடிதத்துடன் வரும் மாணவருக்கு விற்பனைக் அரச அச்சக சட்டப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபன கிளைகளில் இருந்து இந்த தள்ளுபடியைப் பெறலாம்.

இந்த பயிற்சி புத்தகங்கள் சிறப்பான தாள், மட்டையை பயன்படுத்தித் தயாரிக்கப்படுகின்றன எனவும் அவை தற்போதைய சந்தையில் கிடைக்கும் பயிற்சி புத்தகங்களுடன் போட்டித்தன்மையுடன் தயாரிக்கப்படுகின்றன எனவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

(ஐ)



# உயர்தர மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி அன்பளிப்பு

*யாழ்ப்பாணம், நவ. 03*

இணுவில் இந்துக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரிகளில் பயின்று உயர்தர பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழக நுழைவுக்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு தொகை அளிக்கப்பட்டது.

பெரிய பிரித்தானியா இணுவில் ஒன்றியக் கிளை இந்த ஊக்குவிப்பு தொகையை வழங்கியது.

இந்த ஊக்குவிப்பு நிதி கடந்த 28ஆம் திகதி இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெற்ற முழு நிலா கலையரங்க நிகழ்வில் வைத்து இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் வேலுப்பிள்ளை உதயமோகன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இளையதம்பி துரைசிங்கம் ஆகியோரிடம் அறிவாலய உப செயலாளர் கணபதி சர்வானந்தா வழங்கி வைத்தார்.

(ஐ)

# எண்ணிக்கை சமநிலையை பேணுவதற்காக வாகனங்களை ஏற்றுமதி செய்வதற்கு முடிவு

## ஜனாதிபதியின் ஆலோசகர்

*கொழும்பு, நவ. 03*

வீதியில் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கையில் நிலையான சமநிலையை உறுதிப்படுத் நாட்டிலிருந்து குறிப்பிட்டளவு வாகனங்களை ஏற்றுமதி செய்வது குறித்து பரிசீலிக்க வேண்டிய அவசியம் உள்ளது என தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற “பாதுகாப்பான வீதிகள் - பாதுகாப்பான குழந்தைகள்” சர்வதேச வீதி பாதுகாப்பு மாநாடு-2023 இல் உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பாரம்பரிய டீசல் அல்லது பெற்றோல் வாகனங்களுக்கு மாற்றாக மின்சார வாகனங்களை ஏற்றுக்கொள்வதை ஆராய்வது அவசியம். வாகன இறக்குமதி தொடர்பான கொள்கையை உருவாக்க ஜனாதிபதி ஒரு குழுவை நியமித்தார், மேலும் வாகன இறக்குமதியில் நாடு திறந்த கொள்கையை கடைப்பிடிக்க வேண்டுமா அல்லது சிங்கப்பூர் போன்ற முறையை செயற்படுத்த வேண்டுமா என்பதை அந்த குழு மதிப்பீடு செய்யும், அங்கு வாகன இறக்குமதிக்கு ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அனுமதிகள் வழங்கப்படும் ,” எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த கருத்தில் எதிர்கால பொருளாதார நிலப்பரப்பு மற்றும் வீதி உள்கட்டமைப்பின் நிலை போன்ற காரணிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இந்தச் சூழலில் வீதி விபத்துக்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இதன் விளைவாக, குழு பல்வேறு பங்குதாரர்களுடன் தொடர்புடைய திட்டங்களை வகுக்க கலந்துரையாடல்களில் ஈடுபடும்.

“பணியின் நோக்கம் விரிவானது மற்றும் இந்த கவலைகளை நிவர்த்தி செய்வதற்கான சரியான தருணம் இது என நான் உறுதியாக நம்புகிறேன். இதன் விளைவாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் அவற்றுடன் தொடர்புடைய உயிரிழப்புகள் மற்றும் ஊனங்கள் ஆகியவற்றுடன் கூடிய உயர்மட்டக் குழுவொன்றை விரைவாக நிறுவுவார்” என்றும் தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் வீதி விபத்து தடுப்பு நிபுணர் குழுவிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இந்த விடயம் தொடர்பில் மேலும் ஆராய்வதற்காக நாங்கள் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளோம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நோக்கத்திற்காக அயராது பங்களித்த அனைத்து நபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேவேளை, பலரது வாழ்வாதாரம் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளில் கணிசமான பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், ஒரே இரவில் முச்சக்கர வண்டிகளுக்கு முழுமையான தடை விதிக்க முடியாது- என்றார்.

எனவே, நாட்டின் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடையும் வரை, முச்சக்கர வண்டிகளின் பாதுகாப்பை படிப்படியாக அதிகரிக்க ஒரு விரிவான திட்டம் தேவை - என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# மைத்திரியின் கோரிக்கை உயர்நீதிமன்றால் நிராகரிப்பு

*கொழும்பு, நவ. 03*

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கில், நீதிமன்ற உத்தரவிற்கமைய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செலுத்த வேண்டிய நட்டஈட்டை 10 வருடங்களில் செலுத்த முன்வைக்கப்பட்ட கோரிக்கையை உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

உயர் நீதிமன்றத்தின் 7 பேர் அடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நட்டஈட்டை 2024 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதிக்குள் செலுத்துமாறு நீதியரசர்கள் குழு உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு 2024 ஜூலை 15 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

(ஐ)

# கணவரின் அந்தரங்க உறுப்பை வெட்டிய மனைவிக்கு பிணை!

*கொழும்பு, நவ. 03*

தனது கணவரான இராணுவ சிப்பாயின் அந்தரங்க உறுப்பை பாக்குவெட்டியால் வெட்டி காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மனைவியை இரண்டு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்குமாறு அநுராதபுரம் பிரதான நீதிவான் நாலக சஞ்சீவ ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

தனது கணவர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது பாக்குவெட்டியால் அவரின் அந்தரங்க உறுப்பை வெட்டிக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் குறித்த பெண் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

காயமடைந்தவர் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பொலநறுவை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேக நபரை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் மனநல பிரிவில் அனுமதித்து மருத்துவ சோதனைகளை மேற்கொண்டு எதிர்வரும் 17ஆம் திகதி மருத்துவரின் சான்றிதழை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(ஐ)

# வேலை வாய்ப்பு பெற்றுதருவதாக பண மோசடி செய்தவருக்கு மறியல்

*கொழும்பு, நவ. 03*

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதானவரை மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில், அவர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி பண மோசடி செய்துள்ளமை கண்டறியப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 42 வயதுடைய பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபருக்கு எதிராக சிலாபம், கனேமுல்ல, வெலிகட, மீகொட, ஆனமடுவ, கடவத்தை, பிலியந்தலை மற்றும் குருநாகல் பகுதிகளில் இடம்பெற்ற 14 பண மோசடி சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த சம்பவங்களில் ஒரு கோடி ரூபாய் பணத்தை அவர் மோசடி செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


மேலும், சந்தேகநபருக்கு நீதிமன்றங்களால் 10 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பொலநறுவை நீதிமன்றில் நேற்று முன்தினம் சந்தேகநபர் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஐ)

# மலையக மக்களுக்கான காணி உரிமை உறுதி செய்யப்படும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

**கொழும்பு, நவ. 03**
**இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியேறிய மலையக மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்துவது மாத்திரமன்றி, அவர்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் வீடுகள் உள்ளிட்ட அனைத்து சலுகைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்படும் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.**



தமிழ்நாட்டிலிருந்து குடியேறியுள்ள மலையக மக்கள் கடந்த 200 ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் ஒத்துழைப்பை வழங்கியுள்ளதாகவும் சமூக மற்றும் பொருளாதார பணியை அவர்கள் ஆற்றியுள்ளனர் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில், மலையக மக்கள் ஆற்றிய சேவைக்கு உரிய கௌரவத்தை வழங்கும் வகையில், அவர்களை வேறு பிரஜைகளாக கருதாமல் இலங்கை மக்களாக ஒன்றிணைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

காணி உரிமை உட்பட கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்டும் என்பதோடு, பிரஜைகள் என்ற வகையில் சிரமத்தை மாத்திரம் வெளிப்படுத்தாமல் அவர்கள் தமக்கான உரிமைகளையும் அனுபவிக்கும் தரப்பினராக வாழ்வதை காண்பதே தனது எதிர்பார்ப்பு எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# மனித மூலதனத்தை வலுப்படுத்த உலக வங்கி தொடர்ந்து உதவும்!

## செயல் முகாமைத்துவ பணிப்பாளர் உறுதி

கொழும்பு, நவ. 03
இலங்கை அரசாங்கம் பொருளாதார மீட்சி மற்றும் பேண்தகு வளர்ச்சிக்காக சீர்திருத்தங்களை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். மக்களில் முதலீடு செய்வதற்கும் மனித மூலதனத்தை வலுப்படுத்துவதற்கும் தொழில்களை உருவாக்குவதற்கும் உலக வங்கி தொடர்ச்சியான உதவி வழங்கும் என்று இலங்கைக்கு வருகை தந்த உலக வங்கியின் செயல்பாடுகளுக்கான முகாமைத்துவ பணிப்பாளர் அனா பியடேய் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் தனது பயணத்தை நிறைவு செய்தார். இதன்போது வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அழிவுகரமான பாதிப்புகளை ஏற்படுத்திய, முன்னொரு போதும் இல்லாத அதிர்ச்சிகளில் இருந்து இலங்கை மீட்சி பெற்றுக்கொண்டிருக்கும் இந்த வேளையில் பொருளாதாரத்தை உறுதிநிலைப்படுத்தி முதலீடுகளை கவரும் விதத்தில் அதன் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் தொழில்களை உருவாக்கவும் மிக வறிய மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்களை பாதுகாக்கவும் எதிர்கால நெருக்கடிகளுக்கான தாங்குதிறனை காட்டியெழுப்பவும் உறுதியான மற்றும் காலம் தாழ்த்தாத சீர்திருத்தங்களை நாடு தொடர்ந்து அமுல்படுத்த வேண்டும்.

இதேவேளை அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வலுப்படுத்தப்பட்ட ஆளுகை, மக்களின் ஈடுபாடு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்", - என்றும் கூறினார். (ஐ)

# டெங்கு நோயாளர் மேலும் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 03
இந்த வருடத்தில் மட்டும் 68 ஆயிரத்து 497 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அத்துடன், 32 பேர் உயிரிழந்தனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதன்படி மேல் மாகாணத்தில் 32 ஆயிரத்து 862 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், மத்திய மாகாணத்தில் 7,878 பேரும் வடமேல் மாகாணத்தில் 5,671 பேரும் சப்ரகமுவ மாகாணத்தில் 5,651 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# 217 மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு தொடர்கிறது

கொழும்பு, நவ. 03
நாட்டில் மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளில் தொடர்ந்து 217 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மருந்து தட்டுப்பாட்டுகள் சற்று குறைந்துள்ள போதிலும், வரவிருக்கும் மாதங்களில் மீதமுள்ள தட்டுப்பாட்டை 100ஆகக் குறைக்க வேண்டிதேவையுள்ளது. எனினும், 14 உயிர் காக்கும் மருந்துகள் உட்பட அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை எனவும், தற்போது பயன்பாட்டில் உள்ள சுமார் ஆயிரத்து 300 மருந்துகளில் 383 அத்தியாவசியமானவையாகக் கருதப்படுகின்றன. தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகளை விரைவில் கொள்முதல் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# ஊட்டச்சத்துள்ள உணவின்மையால் மாணவர்களின் வருகையில் பாதிப்பு!

## கொழும்பிலேயே இந்த நிலை என்கிறது ஆய்வு

கொழும்பு, நவ. 03
ஊட்டச்சத்துள்ள உணவுகளை பாடசாலைக்கு கொண்டு செல்ல முடியாமையால் மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வது தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள கொழும்பு ஏர்பன் லாப் என்ற அமைப்பு, பணிஸ் போன்ற சிற்றூண்டிகள் போன்றவற்றை கொண்டுவரும் மாணவர்களை ஆசிரியர்கள் தண்டிக்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளது

தனது ஆய்வு குறித்து அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்,

கொழும்பிலிருந்து மிகவும் கரிசனை அளிக்கக்கூடிய செய்தி வருகின்றது ஒரு வருடத்துக்கு முன்னர் கொழும்பில் நாங்கள் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்கள் மத்தியில் மேற்கொண்ட ஆய்வின்போது மாணவர்கள் பாடசாலைக்கு செல்வது இரு காரணங்களால் பாதிக்கப்பட்டது.

ஒன்று போக்குவரத்து செலவு, இரண்டாவது பாடசாலைகளுக்கு ஊட்டச்சத்துள்ள உணவுகளை கொடுத்துவிடும் வசதியின்மை.

ஐ. டி. எஸ். யு. கே. அமைப்புடன் இணைந்து கொழும்பின் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்கள் மத்தியில் உணவு சூழல் குறித்து நாங்கள் கடந்த சில மாதங்களாக மேற்கொண்ட பணிகளின் போது நகரில் இதே நிலைமை நீடிப்பது தெரியவந்துள்ளது. ஊட்டச்சத்துள்ள உணவுகளை பாடசாலைக்கு கொண்டு செல்ல முடியாமையால் மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வது தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு பெற்றோர் பணிஸ் மற்றும் சிற்றூண்டிகள் போன்றவற்றை கொடுத்தனுப்பினால் ஆசிரியர்கள் மாணவர்களை தண்டிக்கின்றனர்.

பாடசாலைகளின் அறிவுறுத்தலின்படி சோறு, கறி போன்றவற்றை கொண்டுவரவேண்டும் என வற்புறுத்துகின்றனர். கொழும்பு பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஊட்டசத்துள்ள உணவை இலகுவாக வழங்கும் நடைமுறை இல்லை

நாங்கள் இந்த வருடம் இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். உடல்நலத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் குடும்பங்களின் ஏனைய செலவுகளை குறைப்பதற்காகவும் இலவச உணவு மற்றும் மாணவர்களுக்கு இலவச போக்குவரத்து.

2020 முதல் கற்றல் இழப்பு என்பது குறிப்பிடத்தக்க விடயமாக காணப்படுகின்றது போக்குவரத்து உணவு கற்றல் உபகரணங்கள் போன்றவற்றின் செலவுகளால் குடும்பங்கள் இன்னமும் வழமையான கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

(ஐ)

# வட, கிழக்கு விவகாரத்தை கையாளும்போது அரசாங்கம் பக்கச்சார்பற்று நடக்கவேண்டும்!

## தேரர்கள் மீதான குற்றச்சாட்டுக்கு அஸ்கிரிய பீடம் பதில்

கொழும்பு, நவ. 03
அரசாங்கம் பௌத்த மதகுருமாரின் நடத்தைகள் குறித்து குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு முன்னர் வடக்கு, கிழக்கு விவகாரங்களை கையாள்வதில் உணர்வுபூர்வமாகவும் பக்கச்சார்பற்ற விதத்திலும் நடந்துகொள்ளவேண்டும் என அஸ்கிரிய பீடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மூன்று தசாப்த மோதல்களின் பின்னர் வடக்கு, கிழக்கில் வசிக்கும் மக்களின் குரல்களை சட்ட அமுலாக்கல் அதிகாரிகளும் அரசாங்கமும் உரிய முறையில் செவிமடுப்பதில்லை என தெரிவித்துள்ள அஸ்கிரிய பீடத்தை சேர்ந்த மெதகம தம்மானந்த தேரர் ஒரு பௌத்த மதகுருவின் நடத்தையை அடிப்படையாக வைத்து நிலைமையை தவறாக அர்த்தப்படுத்த வேண்டாம். அம்பிட்டிய சுமண தேரரின் நடவடிக்கைகள் குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள அவர் அம்பிட்டிய தேரரின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், அந்த தேரரும் அவரது சமூகத்தினரும் சில பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர். அதன் காரணமாகவே அவர் அவ்வாறு நடந்துகொள்கின்றார்.

முன்னைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் என்ற அடிப்படையில் அம்பிட்டிய தேரரும் அவரின் சமூகத்தினரும் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும் தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அந்தஇரண்டு மாவட்டங்களிலும் காணப்படும் இனப்பிரச்னைகள் காரணமாக சிலருக்கு அங்கு நிரந்தரமான வதிவிடம் இல்லை நான் இந்த அரசாங்கத்தை குற்றச்சாட்டவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து அரசாங்கங்களும் இதனை அலட்சியம் செய்துள்ளன. சிலர் இந்த விடயத்தை வேறு கண்ணோட்டத்தில் பார்த்தனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கல்வியை நிறுத்தி வேலைக்கு செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## குடும்ப சுகாதார பணியகம் தகவல்

கொழும்பு, நவ. 03

**பொருளாதார நெருக்கடி காரணமாக 12 முதல் 13 வயது வரையிலான பல சிறுவர்கள் பாடசாலை கல்வியை இடை நிறுத்தியுள்ளதாக குடும்ப சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது.**

சுகாதார மேம்பாட்டுப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தை வலுப்படுத்தும் வேலைத் திட்டம் தொடர்பில் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

குடும்ப சுகாதாரப் பணியகத்தின் பாடசாலை சுகாதாரப் பிரிவின் தலைவர் மருத்துவர் ஆயிஷா லொகு பாலசூரிய இதனை தெரிவித்தார்.

இந்த நிலைமை பல பாடசாலைகளில் குறிப்பாக கொழும்பு நகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகள் மற்றும் தொலைதூர மாகாணங்களில் அமைந்துள்ள சிறிய பாடசாலைகளில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

பாடசாலைக் கல்வியை பாதியில் நிறுத்திய மாணவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமாயின் அது மிகவும் முக்கியமானதெனவும் முடியாத பட்சத்தில் தொழில் பயிற்சியை அவர்களுக்கு வழங்கினால் நல்லது எனவும் நிபுணத்துவ வைத்தியர் மேலும் தெரிவித்தார்.

அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த நிலை குறித்து கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டு அந்த குழந்தைகளின் செலவுகளுக்காக நிதியொன்றை ஸ்தாபிக்க முன்மொழியப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் கலாநிதி ஆயிஷா லொகு பாலசூரிய குறிப்பிட்டார். (அ)

# வாக்குறுதிகளை மக்கள் சரியாக பார்க்கவேண்டும்

## கூறுகிறார் ரவி கருணாநாயக்க

கொழும்பு, நவ. 03

தேர்தல் காலங்களில் சில விடயங்கள் வியாபாரமாக மாறும் என்பதால் அரசியல் வாக்குறுதிகளை மக்கள் சரியாக பார்க்கவேண்டும் என முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த சந்தர்ப்பத்தில் நாட்டின் வங்குரோத்து நிலையில் இருந்து வெளியே வரவேண்டி இருக்கின்றது.

வருமானங்களை அதிகரிக்க வேண்டும். ஆகவேதான் வரிகள் அறவிடும் வீதம் அதிகரிக்கப் பட்டுள்ளது.

தற்காலிக திருப்திகள் தற்போது முழு நாட்டையும் வங்குரோத்து நிலைக்கு தள்ளியுள்ளது.

அரசியல் வாக்குறுதிகளை மக்கள் சரியாக பார்க்க வேண்டும். தேர்தல் காலங்களில் சில விடயங்கள் வியாபாரமாக மாறும் அவைதான் எதிர்காலங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

74 வருட பாவத்தை ஒரு வருடத்தில் கழுவி விடலாம் என்று சர்வதேச நாணய நிதியம் நினைக்கின்றது.

இந்த நாட்டு அதிகாரிகள் அவ்வாறான ஒப்பந்தங்களை ஏன் ஏற்றுக்கொண்டார்கள்.

ஆனாலும் தற்போது புதிதாக சில விடயங்களை சிந்தித்து செயற்பட வேண்டியிருக்கின்றது-என்றார். (அ)



# கசிப்பு உற்பத்தி நிலையம் கிளிநொச்சியில் அழிப்பு!

கிளிநொச்சி, நவ. 03

கிளிநொச்சி, மாயவனூர் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையமொன்று நேற்று பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இராமநாதபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்தே இந்த முற்றுகை நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது 2,800 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை தப்பிச் சென்ற மர்ம நபர்களை கைது செய்யும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# கியூ.ஆர். குறியீட்டுடன் புதிய லைசன்ஸ் புள்ளிகளைக் குறைக்கவும் நடவடிக்கை

கொழும்பு, நவ. 03

தற்போதுள்ள குறை கடத்திக்கு பதிலாக கியூ.ஆர். குறியீடுகளுடன் சாரதி அனுமதி அட்டையை வழங்கும் திட்டத்தை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தொடங்கியுள்ளது.

அமைச்சரவை அனுமதி கிடைத்ததை அடுத்து இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாக அத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க கூறினார்.

ஒக்ரோபர் 16 ஆம் திகதி இராணுவம் சாரதி அனுமதி அட்டைகளை அச்சிடுதல் மற்றும் வழங்கும் நடவடிக்கையை தம்மிடம் ஒப்படைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கியூ.ஆர். குறியீடுகளுக்கான தனி செயலி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது என்றும் இது மோட்டார் மற்றும் பொலிஸ் திணைக்களங்களினால் மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும் நிஷாந்த அனுருத்த வீரசிங்க கூறினார்.

மேலும் போக்குவரத்து சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கான டிமெரிட் புள்ளிகள் முறையும் ஸ்மார்ட் சாரதி அனுமதி அட்டையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக வீரசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

## பணமோசடி வழக்கு;

# நாமல் ராஜபக்ஷ எம்.பி. உள்ளிட்டோர் விடுதலை!

கொழும்பு, நவ. 03

கோவர்ஸ் கோர்ப்பரேட் சர்வீசஸ் நிறுவனம் சம்பந்தப்பட்ட வழக்கில் இருந்து நாமல் ராஜபக்ஷ உட்பட அனைத்து பிரதிவாதிகளையும் விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு, குறித்த நிறுவனத்தின் ஊடாக நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் 30 மில்லியன் ரூபாவை முறைகேடாக சம்பாதித்ததாக குற்றம் சாட்டி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இரண்டரை இலட்சம் பேர் வெளியேற்றம்

கொழும்பு, நவ. 03

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்து 450 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி செனரத் யாப்பா இதனைத் தெரிவித்தார்.

சவுதி அரேபியா, குவைத், கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக்கே அதிகமானோர் சென்றுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (அ)

# 'எட்கா' ஒப்பந்தம் தொடர்பில் 12ஆம் சுற்று பேச்சு ஆரம்பம்

கொழும்பு, நவ. 03

2018 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்டிருந்த பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான முன்னெடுப்புக்களை மீள ஆரம்பிக்கும் வகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 12ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை, ஒக்ரோபர் 30ஆம் திகதி முதல் நவம்பர் 1ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றது.

நாட்டின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதன் மூலம் ஏற்றுமதி பல்வகைப்படுத்தலுக்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆசியாவிலுள்ள மிகப்பெரிய பொருளாதாரங்களுடன் இணைவதே இலங்கை அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் உலக பெறுமதிச் சங்கிலியின் ஊடாக பிரதான தரப்பினர்களுடன் இணைவதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார கூட்டுறவானது வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகிய இரு நாடுகளினதும் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததாகும். முன்னுரிமையான துறைகளில் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை விரிவாக மேம்படுத்தும் நோக்கத்துடன் 2018 முதல் இடைநிறுத்தப்பட்ட எட்கா தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க , ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 29 ஜூலை 2023 அன்று இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின்போது, இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

அதன்படி, வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சின் தலைமைப் பேச்சுவார்த்தையாளரும், வர்த்தகத் திணைக்களத்தின் இணைச் செயலாளருமான ஆனந்த் ஸ்வரூப் தலைமையிலான 19 இந்திய அதிகாரிகள் குழு இலங்கை வந்து இந்த விரிவான ஒப்பந்தம் குறித்து விரிவாகக் கலந்துரையாடியது.

வெளிவிவகார அமைச்சு, வர்த்தகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, கைத்தொழில் அமைச்சு, வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், வர்த்தகத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி மற்றும் முதலீட்டுச் சபை, ஜனாதிபதி செயலகத்தின் பிரதான பேச்சுவார்த்தையாளர் கே.ஜே. வீரசிங்க தலைமையிலான தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழு தலைமையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

பண்டங்கள், சேவைகள், ஆரம்ப கட்ட விதிகள், வர்த்தக தீர்வுகள், சுங்க நடைமுறைகள் மற்றும் வர்த்தக வசதிகள், வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள், சுகாதாரம் மற்றும் தாவர சுகாதார நடவடிக்கைகள், சட்ட மற்றும் நிறுவன விடயங்கள் ஆகியவை குறித்து இந்தக் கலந்துரையாடலில் உள்ளடக்கப்பட்டன. அத்துடன், இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடும் விசேட அமர்வு ஒன்று இடம்பெற்றது. (அ)

# இந்திய வங்கியை திருமலையில் திறந்தார் இந்திய நிதி அமைச்சர்!





திருமலை, நவ. 03

**இந்திய அரச வங்கி (ஸ்டேட் பாங் ஒவ் இந்தியா) கிளையை திருகோணமலையில் நேற்று இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திறந்து வைத்தார்.**

**கிழக்கு மாகாண ஆளுனரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாணத்துக்கு நேற்று முன்தினம் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பயணம் மேற்கொண்டார். கிழக்கு ஆளுநரின் ஏற்பாட்டில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் முதல் நிகழ்வாக நேற்று திருக்கோணேச்சரம் ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டார்.**

இதனை தொடர்ந்து இந்திய அரச வங்கியை நிதியமைச்சர் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின்போது ஆளுநருக்கு வங்கியில் முதல் கணக்கு திறக்கப்பட்டு இந்திய அமைச்சர் சீதாராமனால் வங்கி கணக்குப்புத்தகம் வழங்கப்பட்டது.

அத்துடன் ஆளுநரால் நிதிய மைச்சருக்கு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து திருகோணமலையில் உள்ள இந்திய ஒயில் கூட்டுத்தாபனத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய,இந்திய தூதுவர் கோபால் பக்லே, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, ஆளுநரின் பிரத்தி யேக செயலாளர் எல்.எல். அனில் விஜயசிரீ, அரச அதிபர் மற்றும் அமைச்சின் செயலாளர் கள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

# மட்டக்களப்பில் கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும்!

மட்டக்களப்பு, நவ. 03

மட்டக்களப்பு கிரான் புலி பாய்ந்தகல் பிரதேசத்தில் பிரதேச மக்களின் நன்மை கருதி இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

232 ஆவது காலால் படை பிரிகேட்டினால் இந் நிகழ்வு ஆரம்ப புலிபாய்ந்தகல் மருத்துவ சிகிச்சை பிரிவு சுகாதார வைத்தியர் அதிகாரி அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந் நிகழ்வானது கிழக்கு மாகாண பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்னவின் வழிகாட்டலில் இடம்பெற்றது.

இதன்போது கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டது.

நிகழ்வில் 23 ஆவது காலால் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நிலந்த பிரேமரத்ன, 232 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் அஜித் புஸ்பகுமார, பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு மற்றும் நன்கொடையாளர் ஜோர்ச் குணரட்ன ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.




# சிங்கள பாடநெறி பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நிந்தவூரில்!



அம்பாறை, நவ. 03

இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழி கொள்கையை அமுல் படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நிந்தவூர் கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடத்தப்பட்ட 150 மணித்தியாலங்களைக் கொண்ட சிங்கள மொழிக்கற்கை நெறியினை (25 நாட்கள்) வெற்றிகரமாக பூர்த்தி செய்த 96 ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா நேற்று முன்தினம் நிந்தவூர் அல்-அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) காசிமி மண்டபத்தில் இடம்பெற்றது.

இப்பாடநெறிக்கு அரசகரும மொழிகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரின்ஸ் சேனாதீர கிழக்கு மாகாண அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணைப்பாளர் ஜே.பி. பல்லவி ஆகியோர் இதற்கான அனுமதியை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். எம். சாஜித், முன்னாள் நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஷரிபுடீன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# கல்முனை பிராந்தியத்துக்கான மருத்துவ ஆய்வுகூடம் திறப்பு

அம்பாறை, நவ. 03

கல்முனை பிராந்தியத்துக்கான மருத்துவ ஆய்வுகூடம் பாலமுனை பிரதேச வைத்தியசாலைக் கட்டடத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ. எல்.எம்.றிபாஸ் தலைமையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்பு விழா நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகவும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மெலிண்டன் கொஸ்தா கௌரவ அதிதியாகவும், முன்னாள் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரும், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான மருத்துவர் எம்.பீ.அப்துல் வாஜித் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டு ஆய்வுகூடத்தினை திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய



அதிகாரி மருத்துவர் எம்.சீ.எம். மாஹிர், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் இப்ஹாம், பாலமுனை பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.ஜே. நௌபல், கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், வைத்தியர்கள், பிராந்திய ஆய்வு கூட மேற்பார்வையாளர் ஏ எம் எம் சலீம், சுகாதார உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

மிகவும் குறைந்தளவிலான நிதியினைக் கொண்டும் பிராந்திய சுகாதார நிறுவனங்களில் உள்ள வளங்களைக் கொண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த பிராந்திய ஆய்வுகூடத்தில் பிராந்திய வைத்தியசாலைகளில் எடுக்கப்படுகின்ற நோயாளர்களின் குருதி மற்றும் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படவுள்ளதுடன், விசேட பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. இங்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் முடிவு அறிக்கைகள் உரிய நேரத்துக்குள் சம்மந்தப்பட்டவர்களுக்கு ஒன்லைன் மற்றும் குறுஞ்செய்தி ஊடாகவும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. மேலும் இந்த ஆய்வுகூடத்தின் ஊடாக பிராந்திய மக்கள் பெரிதும் நன்மையடையவுள்ளனர். (அ)

# கல்முனையில் சனியன்று முப்பெரும் நூல் வெளியீடு

காரைதீவு, நவ. 03


பாண்டிருப்பு அறிஞர் அண்ணா மன்றம் நடத்தும் முப்பெருநூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மண்டபத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக மொழித் துறை பேராசிரியர் செ. யோகராஜா முன்னிலையில் நடைபெற இருக்கும் இந்நிகழ்வில் முதன்மையதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் கிழக்கு பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ச. நவநீதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

இங்கு சரவணமுத்து கணேசமூர்த்தி கவிஞர் சரவணன் எழுதிய "உயிர்ப்பின் முகவரி" சிறுகதை தொகுப்பு நூல், திருமதி தனலட்சுமி முரசொலிமாறன் எழுதிய "அரசியல் சமூகவியல் அறிமுகமும்" ஆய்வு கட்டுரை தொகுப்பு நூல், சரவணமுத்து நரேந்திரன் விவேகவெளி தமிழேந்திரன் எழுதிய "தாயும் தமிழும்", கவிதை தொகுப்பு நூல் ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்படுகின்றது. (அ)

# இஸ்ரேல் - ஹமாஸ் போரை இடைநிறுத்தக் கோரிக்கை

## அமெரிக்க ஜனாதிபதி பைடன் விடுத்தார்



மின்னசோட்டாவில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பைடனிடம்

**வாஷிங்டன், நவ. 03**

**இஸ்ரேல் - ஹமாஸ் போரை இடைநிறுத்தம் செய்யுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அழைப்பு விடுத்துள்ளார்.**

பெண் ஒருவர் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்குமாறு கூறினார். அவருக்கு பதிலளித்த அவர்,

எங்களுக்கு ஓர் இடைநிறுத்தம் தேவை என்று நான் நினைக்கிறேன். இடைநிறுத்தம் என்றால் கைதிகளை (இஸ்ரேலில் பிடிக்கப்பட்ட பணயக் கைதிகள்) வெளியில் எடுப்பதற்கு நேரம் கொடுங்கள். இரு நாடுகளின் தீர்வை நான் ஆதரித்தேன். ஆரம்பத்திலிருந்தே இந்தக் கொள்கை என்னிடம் உள்ளது. உண்மை என்னவென்றால் ஹமாஸ் ஒரு பயங்கரவாத அமைப்பு.", என்று கூறினார். (ஐ)

# இஸ்ரேலுக்கு தகுந்த பாடம் கற்பிப்போம்!

## ஹமாஸ் அமைப்பு எச்சரிக்கை

*காஸா, நவ. 03*



இஸ்ரேலுக்கு தகுந்த பாடத்தை கற்றுக்கொடுப்போம். ஒக்ரோபர் 7ஆம் நாளன்று நடத்திய தாக்குதல் போன்று மீண்டும் நடத்துவோம் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த 7ஆம் திகதி திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன், பலர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட னர்.

இதைத் தொடர்ந்து இரு தரப்பினரிடையேயும் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் பலியாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அகதி முகாம் மீதான இஸ்ரேலின் தாக்குதல் போர் குற்றத்துக்கு சமன்

## ஐ. நா. சபை அறிவிப்பு

*நியூயோர்க், நவ. 03*

'அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உயிரிழந்ததையும், அங்கு ஏற்பட்டுள்ள அழிவின் அளவையும் கருத்தில் கொண்டு, இவை போர் குற்றங்களுக்கு சமமான தாக்குதல்கள் என கருதுகிறோம்' - என்று ஐ. நா. சபை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் நேற்று 27ஆவது நாளாகவும் தொடர்ந்தது. கடந்த காலங்களில் இரு தரப்புக்கும் இடையில் ஏற்பட்ட 4 போர்களை விடவும் இந்த போர் அதிக உயிரிழப்புகளையும், கடுமையான மனிதாபிமான நெருக்கடியையும் ஏற்படுத்தி வருகின்றது.

எனவே, காஸாவில் மனிதாபிமான அடிப்படையில் போரை நிறுத்தை வலியுறுத்தி ஐ. நா. பொது சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், அதை திட்டவட்டமாக நிராகரித்த இஸ்ரேல், ஹமாஸ் போராளிகளை முழுமையாக ஒழிக்கும் வரை ஓய மாட்டோம் என சபதம் செய்து போரை தொடர்ந்து வருகின்றது.

சர்வதேச ஊடகம் வெளியிட்ட செய்தி ஒன்றில், காசா முனையில் அகதிகள் அதிகம் வசிக்கும் முகாம் மீது இஸ்ரேல் விமானப்படை தாக்குதல் நடத்தியது. இதில் 50 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. எனவே, ஹமாஸ் போராளிகளின் சார்பில் வெளியிடப்பட்ட தகவலின்படி, 195 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என்றும் 777 பேர் காயமடைந்துள்ளதாகவும், 120இற்கும் அதிமானோர் இடிபாடுகளில் சிக்கி இருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்த தாக்குதல் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் 'எக்ஸ்' வலைதள பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில்,

'அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உயிரிழந்ததையும், அங்கு ஏற்பட்டுள்ள அழிவின் அளவையும் கருத்தில் கொண்டு, இவை போர் குற்றங்களுக்கு சமமான தாக்குதல்கள் என கருதுகிறோம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# ராபா எல்லையை திறந்தது எகிப்து

## வெளிநாட்டவர்கள் வெளியேறினர்

*ராபா, நவ. 03*

போர் நடக்கும் காஸா - எகிப்பு எல்லையான ராபா பகுதியை எகிப்து திறந்துள்ளது.

காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல் மூன்று வாரங்களுக்கு மேலாக நீடித்து வருகிறது.

இந்தச் சூழலில், ராபா எல்லையை எகிப்து நேற்றுமுன்தினம் திறந்தது. காஸாவிலிருந்து ராபா வழியே எகிப்துக்குள் வருவதற்கு வெளிநாட்டவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், போரில் தீவிர காயமடைந்த 81 பலஸ்தீனர்களுக்கும் அனுமதி வழங்கப்பட் டுள்ளதாக காஸா எல்லை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எகிப்துக்கும் பலஸ்தீனத்தின் காஸாவுக்கும் எல்லைப் பகுதியாக ராபா அமைந்துள்ளது. போரிலிருந்து தப்பிப்பதற்காக மக்கள் காஸாவிலிருந்து வெளியேறி எகிப்துக்குள் நுழைய திட்டமிட்ட நிலையில், எகிப்து அரசு ராபா எல்லையை மூடியது. அதன் பிறகு, ராபா எல்லை வழியாக காஸாவுக்குள் அத்தியாவசிய பொருட்களைக் கொண்டு



செல்வ தற்கு மட்டும் எகிப்து அனுமதி வழங்கியது. காஸாவிலிருந்து மக்கள் எகிப்துக்குள் நுழைய அனுமதி மறுத்தது.

காஸாவில் 24 லட்சம் மக்கள் வசித்து வருகிறனர். இவர்களில் 44 நாடுகளைச் சேர்ந்த மக்களும் அடக்கம். ஐ. நா. உட்பட 28 சர்வதேச அமைப்புகள் காஸாவில் உள்ளன.

இந்நிலையில், அமெரிக்கா மற்றும் கட்டார் ஆகிய இரு நாடுகள் நடத்திய பேச்சை தொடர்ந்து மக்கள் வெளியேறுவதற்காக தற்காலிகமாக ராபா எல்லையை எகிப்து திறந்துள்ளது.

காஸாவில் உள்ள வெளிநாட்டவர்களுக்கும் இரட்டை குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே ராபா எல்லை வழியாக எகிப்துக்குள் வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. மேலும், போரில் காயமடைந்த 81 பலஸ்தீனர்களை சிகிச்சைக்காக எகிப்துக்குள் அழைத்து வருவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. போரால் காயமுற்றவர்கள் மற்றும் உடல்நலம் குன்றியவர்களை அழைத்துச் செல்ல எகிப்து எல்லையில் அம்பு லன்ஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன. (ஐ)

# ஹமாஸின் முன்வரிசையை இஸ்ரேல் படைகள் தகர்த்தன

*ஜெருசலேம், நவ. 03*

வான் மற்றும் கடலில் இருந்து பின்வாங்கிய நிலையில் இஸ்ரேலியப் படைகள் வடக்கு காஸாவில் ஹமாஸின் முன் வரிசைகளை உடைத்துவிட்டன என்று இஸ்ரேல் இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியப் படைகள் "காஸா நகரின் வாயில்களில்" இருக்கின்றன என்று ஓர் இஸ்ரேலிய தளபதி கூறினார்.

பலஸ்தீன செஞ்சிலுவைச் சங்கத்தின் கூற்றுப்படி, ஒரே இரவில், அல்-குட்ஸ் மருத்துவமனையின் அருகாமையில், நகரத்தில் உரத்த வெடிப்புகள் மற்றும் ஷெல் தாக்குதல்கள் கேட்டன. உடனடியாக மருத்துவமனையிலிருந்து வெளியே றுமாறு



இஸ்ரேலிய அதிகாரிகள் முன்னதாக எச்சரித்திருந்தனர். இருப்பினும், நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் அது சாத்தியமற்றது என்று ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# அரச, தனியார்துறைக்கான சம்பள அதிகரிப்பு 3 மாதங்களுக்கு முன் எடுக்கப்பட்ட தீர்மானம்!

## கூறுகிறார் மனுஷ நாணயக்கார



**கொழும்பு, நவ. 03**

**அரச மற்றும் தனியார் துறைக்கு அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் சம்பளம் அதிகரிக்கத் தயார் எனத் தெரிவிக்கப் பட்டதையடுத்து, தொழிற்சங்கங்கள், ஏனைய அரசியல் கட்சிகள் தமது அரசியல் இலாபங்களுக்காக சம்பள அதிகரிப்பு கோரி போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. ஆனால் சம்பள அதிகரிப்பு தொடர்பான தீர்மானம் மூன்று மாதங்களுக்கு முன்னரே அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டிருந்தது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.**

தொழில் அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பள அதிகரிப்பு கோரி போராட்டங்கள் இடம்பெற்று வருவதை நாங்கள் காண்கிறோம். ஆனால் அரச, தனியார் மற்றும் தோட்ட துறையினருக்கு சம்பளம் அதிகரிக்க அரசாங்கம் மூன்று மாதங்களுக்கு முன்னரே தீர்மானித்திருந்தது. இவர்கள் இப்போது போராட்டம் செய்கின்றனர்.

அரசாங்கத்தின் சம்பள அதிகரிப்பு தீர்மானத்தின் எமது பங்காக தனியார் துறையின் அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்க ஆரம்ப கலந்துரையாடல் நடத்தி, தொழில் ஆலோசனை சபையின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்டு அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்தோம். அடிப்படை சம்பளத்தை அதிகரிப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருந்த நிலையிலேயே வரவு செலவு திட்டத்தில் இதனை செய்வோம் என ஜனாதிபதி எங்களுக்கு தெரிவித்திருந்தார்.

அத்துடன், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடினோம். அப்போது ஜனாதிபதி தோட்ட கம்பனிகளுடன் கலந்துரையாடி அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக எமக்கு தெரிவித்தார்.

சிலரின் அறியாமையாலும், அனுபவமின்மையாலும், தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில், நாட்டின் அரச வருமானத்தை இல்லாமல் செய்தார்கள். ஆனால் தற்போதைய ஜனாதிபதி இந்த வரி விகிதங்களை மீண்டும் அதிகரித்து அரச வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதன் பிரகாரம் நாங்கள் அதிகமாக சம்பளம் பெறுபவர்களிடமிருந்து குறிப்பிடத்தக்க வரி தொகையை பெற்றுக்கொண்டோம். என்றாலும் உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் குறைவாகவே நாங்கள் வரி அறவிடுகிறோம்.

எவ்வாறு இருப்பினும் நாங்கள் வரவு செலவு திட்டத்தில் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள இருக்கின்ற விடயத்தை அறிந்து கொண்டதால் தான் இவர்கள் வீதிக்கி இறங்கி சம்பள அதிகரிப்பு கோரி போராட்டம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இவர்களின் போராட்டம் மூலம்தான் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது என தெரிவித்து, அவர்களின் சங்கங்களுக்கு ஆட்களை இணைத்துக் கொள்ளவே இவர்கள் முயற்சிக்கின்றனர். எனவே, சம்பள அதிகரிப்பு செய்ய நாங்கள் அமைச்சரவையில் தீர்மானித்திருக்கிறோம். அதனால் அரச ஊழியர்களை வெயிலில் நிறுத்துவதை நிறுத்துமாறு கேட்கிறோம்-என்றார். (அ)

# 18 வயது யுவதியை காணவில்லை!

கொழும்பு, நவ. 03

காலி பிரதேசத்தில் 18 வயது யுவதி ஒருவர் கடந்த ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து காணாமல்போயுள்ளதாக ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்தனர்.

வ்வாறு காணாமல் போன யுவதி காலி தொடம்புவ பிரதேசத்தை சேர்ந்தவர்.

இவர் கடந்த ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி தனது தாயுடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு தன்னைத் தேடும் முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்றும் பொலிஸில் புகாரளிக்கவேண்டாம் என்றும் தன்னால் மீண்டும் வீட்டுக்கு வர முடியாது என்றும் கூறியுள்ளார்.

இவர் காலி பிரதான பஸ் நிலையத்தில் காணப்பட்டமை தொடர்பான காட்சி ஒன்று வீதி கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளது.

இந்த யுவதி தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்குமாறு ஹிக்கடுவை பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுள்ளனர். (அ)

# எச்.ஐ.வி. தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 03

இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் 485 எச்.ஐ.வி. தொற்றாளங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தை விட இந்த வருடம் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய பாலியல் நோய் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜானகி விதானபத்திரன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் இந்த ஆண்டு 4,100 எச்.ஐ.வி நோய்த்தொற்று இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் செப்டம்பர் இறுதிவரை, 485 புதிய எச்.ஐ.வி நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ஒரு அதிகரிப்பாக நாங்கள் பார்க்கிறோம். அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களுடனான ஒத்துழைப்புடன் எச்.ஐ.வி பரிசோதனைகள் அதிகளவில் நடத்தப்பட்டன. இவர்களில் 80 வீத ஆண்களே பதிவாகியுள்ளனர். எச்.ஐ.வி தொற்று 15-49 வயதிற்கு இடையிலானவர்கள் மத்தியிலேயே அதிகளவில் காணப்படுகிறது.

டிசெம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தினால் பொதுமக்களை அறிவூட்டும் விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது-என்றார். (அ)

# மூன்று உணவுப் பொருட்களின் விலையை குறைத்தது சதொச!

கொழும்பு, நவ. 03

நேற்று முதல் அமுலாகும் வகையில் மூன்று உணவுப் பொருட்களின் விலையை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் கடலையின் விலை 9 ரூபா குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 540 ரூபாவாகும்.

பாசிப்பயறு ஒரு கிலோகிராம் விலை 77 ரூபா குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 998 ரூபாவாகும்.

அத்துடன், 400 கிலோகிராம் சதொச பால்மாவின் விலை 22 ரூபா குறைக்கப்பட்டுள்ளது அதன் புதிய விலை 948 ரூபாவாகும் என சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

# உற்பத்தி விலைக்கு நிகரான விலையில் உரம் வழங்க முடிவு

கொழும்பு, நவ. 03

தேயிலை பயிர்ச்செய்கைக்கு தேவையான உரத்தை உற்பத்திக்கு இணையான விலையில் வழங்குவதற்கு அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

தேயிலை பயிர்ச்செய்கைக்கு தேவையான உரத்தை மானிய விலையில் வழங்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர விடுத்த கோரிக்கைக்கு அமைய விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேயிலை, இலவங்கப்பட்டை, தென்னை உள்ளிட்ட பெருந்தோட்டப் பயிர்களுக்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான லங்கா உரக் கம்பனியும் வர்த்தக உரக் கம்பனியும் தற்போது விசேட கலப்பு உரத்தை உற்பத்தி செய்து வருகின்றன.

இந்த உரமானது தேயிலை பயிர்ச்செய்கைக்கு மிகவும் ஏற்றது எனவும், தேயிலை கைத்தொழிலுக்கு மானிய விலையில் உரம் வழங்குவது தொடர்பாக அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களின் தலைவர் கலாநிதி ஜகத் பெரேராவுடன் அமைச்சர் கலந்துரையாடியுள்ளார்.

இதன்படி தேயிலை பயிர்ச்செய்கைக்கு தேவையான உரங்களை தமது உற்பத்திகளின் விலைக்கே வழங்குவதற்கு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# மைத்திரி உள்ளிட்டோரின் சொத்து விவரங்களை கோருகிறது நீதிமன்று

கொழும்பு, நவ. 03

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டவர்கள் தமது சொத்துக்கள் தொடர்பான விபரங்களை சத்தியக் கடதாசி மூலம் சமர்ப்பிக்கவேண்டும் என உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு இது வரை முழுமையான நட்டஈடு வழங்கப்படாத நிலையில் டிசெம்பர் 30ஆம் திகதிக்குள் அவற்றினை வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட 13 அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான விரிவான அறிக்கையை தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி குறித்த அறிக்கையை டிசெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# 5 மது உற்பத்தி நிறுவனங்களின் உரிமம் தற்காலிகமாக நிறுத்தம்!

கொழும்பு, நவ. 03

எஞ்சிய வரியை செலுத்த தவறிய ஐந்து மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனங்களுக்கு மதுபான உற்பத்தி மற்றும் அதனை விநியோகம் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டதாக கலால் ஆணையாளர் நாயகம் சமன் ஜயசிங்க தெரிவித்தார்.

நீண்ட காலமாக நிலுவைத் தொகையை செலுத்தாத நிறுவனங்களின் வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒக்டோபர் 30ஆம் திகதியுடன் காலாவதியாகியுள்ளது.

ஐந்து மதுபான உற்பத்தி நிலையங்களில் மது உற்பத்தி நிறுத்தப்பட்டாலும், மதுபான உற்பத்தி நிலையங்கள் அதிகளவில் உள்ளதால் சந்தையில் மதுபானத்திற்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று அவர் கூறினார். (அ)

## மலையக....

நிகழ்வுக்கு தலைமையேற்று உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறுகையில்,

மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைக்கும் வேலைத் திட்டத்துக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கிறது. இதனை செயல்படுத்துவதற்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கல்வித்துறையில் அனைவருக்கும் சமத்துவ வாய்ப்பை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பெரும் பணியாற்றிய மலையக தமிழ் மக்களுக்கு வேறுபாடுகளை காண்பிக்காமல் அவர்களை இலங்கை சமூகத்துடன் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

எந்தவோர் இனக்குழுவாக இருப்பினும் அனைவரும் இலங்கையர்கள் என்ற வகையில் அவர்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும் என்றும், அனைவரையும் ஒன்றிணைத்து அபிவிருத்தி அடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதே நோக்கம் - என்றார்.

இதன்போது, கொட்டகலை, மவுன்டவுன் தோட்டத்தின் திம்புல கீழ்ப்பிரிவு பகுதியில் இந்திய உதவியில் ஆரம்பிக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரால் நிகழ்நிலை முறைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ஐ)

## இந்திய....

கிளையை திறந்து வைக்கிறார்.

அதன் பின்னர் யாழ்ப்பாண கலாசார மையத்தில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்பார். இதனை அடுத்து யாழ். பொது நூலகத்தைப் பார்வையிடுவார். அங்கிருந்து யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்துக்கு சென்று அலையன்ஸ் எயார் விமானம் ஊடாக சென்னைக்கு திரும்புகிறார். (அ)

## கோணேஸ்வரத்தை...

சீதாராமன் தெரிவித்தார்.

மூன்று நாள் பயணமாக நாட்டுக்கு வருகை தந்துள்ள இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று வியாழக்கிழமை திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார். இதன்போதே மேற்கண்ட உறுதிமொழியை ஆறு. திருமுருகனிடம் வழங்கினார்.

இந்த சந்திப்பின்போது, ஆறு. திருமுருகன்,

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டு, ஒல்லாந்தரால் சூறையாடப்பட்ட திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை இன்று ஓரளவு பேணிப் பாதுகாக்கின்றோம். இந்த வரலாற்று சிறப்பு மிக்க ஆலயத்தையும் மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கருங்கல்லால் பெருங்கோயிலாக புனரமைத்துத் தர இந்தியா முழு உதவி வழங்க வேண்டும் என்று கோரினார்.

அவரின் இந்தக் கோரிக்கையை செவிமடுத்த இந்திய நிதி அமைச்சர்,

மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கோணேஸ்வரத்தையும் புனரமைக்க உதவ முடியும். அதற்கான முன்னேற்பாடுகள், முறைப்படியான கோரிக்கைகள், அனுமதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்", என்று கூறினார் என்று ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

இதேசமயம், திருக்கேதீஸ்வரம் ஆலயம் இந்திய அரசின் நிதியுதவியில் புனரமைப்பு செய்யப்படுவதில் ஆறு. திருமுருகனும் பங்காற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்ப்பாணம்...

அத்துடன், சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களையும் நேரில் பார்வையிடவுள்ளது.

சீன தூதுவரின் இந்தப் பயணத்தின் போது சீன புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேருக்கு மாதாந்தம் 6,500 ரூபாய் உதவுதொகை வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவிருந்தது. எனினும், சீன தூதுவரின இந்தப் பயணத்தின் போது யாழ். பல்கலைக்கழகத்துக்கான வருகை தவிர்க்கப்பட்டுள்ளதாக தூதரக வட்டாரங்கள் மூலம் அறிய வருகின்றது.

## இந்து....

திருத்தியமைக்கவோ நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தக் குழு வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழுவின் ஆணையாளர்களான ஸ்ரீபன் ஸ்னெக், டேவிட் கெரி ஆகியோர் கடந்த மாதம் (ஒக்ரோபர்) இலங்கை வந்தனர். இவர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு மாவட்டங்களுக்கு சென்று நிலைமைகளை அவதானித்தனர். பல தரப்பினரையும் சந்தித்து பேசியிருந்தனர். இந்நிலையில், அந்த ஆணைக்குழு உறுப்பினர்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

ஸ்ரீபன் ஸ்னெக் வெளியிட்ட அறிக்கையில்,

பல்வேறு மதங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்கள் ஒன்றிணைந்து கீழ்மட்டத்திலிருந்து பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுத்தாலும்கூட, நாட்டில் வாழும் சிறுபான்மையின இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமூகங்களுக்கான மீயுயர் மத சுதந்திரத்தை உறுதிசெய்யும் வகையில் அரசாங்கமானது தற்போது நடைமுறையிலுள்ள "ஒடுக்குமுறை" கொள்கைகள் மற்றும் சட்டங்களை முற்றாக நீக்கவோ அல்லது திருத்தியமைக்கவோ நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேபோன்று இலங்கை அரசாங்கம் மிகவும் மோசமான பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டம் போன்றவற்றைப் பயன்படுத்தி மத சிறுபான்மையினரை தன்னிச்சையாகத் தடுத்துவைப்பது குறித்து தாம் தொடர்ந்து தீவிர கரிசனை கொண்டிருக்கிறது - என்றுள்ளது.

இதேபோன்று டேவிட் கெரி வெளியிட்ட அறிக்கையில்,

"மனசாட்சியின் கைதிகள் (இனம், மதம் சார்ந்த குறித்தவொரு தனிநபரின் கருத்துகளை அவர் வாழும் நாட்டினால் பொறுத்துக்கொள்ள முடியாததால் அந்நபர் கைதுசெய்யப்படல்), மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் மற்றும் மத சிறுபான்மையினர் போன்றோர் அரசாங்க அதிகாரிகளின் தொடர் கண்காணிப்புக்களால் அச்சத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர். அதுமாத்திரமன்றி தொல்பொருள் திணைக்களமானது நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் அந்தப் பிரதேசங்களிலுள்ள கட்டமைப்புகள் மற்றும் பௌத்த பிக்குகளுடன் இணைந்து இந்துகள், இஸ்லாமியர்களின் வழிபாட்டிடங்களை கைப்பற்றுவதற்கு வசதியேற்படுத்தி வருகின்றது.

குறிப்பாக தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் உள்ளிட்ட மதவழிபாட்டுத்தலங்களை பதிவுசெய்வதில் நிலவும் சவால்களுக்கு அரசாங்கம் நிச்சயமாகத் தீர்வு வழங்கவேண்டும். வெளிப்படைத்தன்மை வாய்ந்த பதிவு செயன்முறையை உறுதிப்படுத்தக்கூடியவாறான வழிகாட்டல்களை நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம். அத்தோடு மட்டுமீறிய ஒடுக்குமுறைகள், கண்காணிப்புகள், வன்முறைகள் மற்றும் வெறுப்புணர்வு பேச்சுகள் போன்றவை பற்றி முறையிடும் மத சிறுபான்மையினருக்கு வலுவான பாதுகாப்பை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கின்றோம்" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ். நகரின் சிறப்பு அங்காடிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் அபராதம்

யாழ்ப்பாணம், நவ. 03

யாழ்ப்பாணம் நகரில் இயங்கும் பிரபல சிறப்பு அங்காடி நிறுவனம் ஒன்றுக்கு 56 குற்றங்களுக்காக 2 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

காலவதியான பொருட்கள், பழுதடைந்த பொருட்கள், மனித பாவனைக்கு உதவாத பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தமை, சுகாதாரமற்ற முறையில் நிலையத்தை வைத்திருந்தமை உள்ளிட்ட 56 குற்றங்களுக்காகவே குருநகரிலுள்ள மேலதிக நீதிவான் நீதிமன்றம் இந்த அபராதத்தை விதித்தது.

கடந்த மார்ச் மாதம் நாவாந்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். உதயபாலா தலைமையிலான குழு யாழ்ப்பாணம் நகர வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதன்போது யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள பிரபல சிறப்பு அங்காடி ஒன்றில் காலாவதியான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட சோதனையில் அந்த நிலையத்துக்கு எதிராக 56 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் 56 குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டன. இதையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை நீதிவான் திருமதி நளினி சுதாகரன், சிறப்பு அங்காடியின் உரிமையாளருக்கு 2 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

# மயிலத்தமடு பண்ணையாளர்களுக்கு ஆதரவாக மாணவர்கள் போராட்டம்!

மட்டக்களப்பு, நவ. 03

மயிலத்தமடு - மாதவனை கால்நடை பண்ணையாளர்களின் அறவழி போராட்டம் நேற்று 49 ஆவது நாளாக சித்தாண்டியில் தொடர்ந்தது.

பண்ணையாளர்களும் கால்நடைகளும் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் அநீதிக்கு எதிராக நீதி வேண்டி இந்தச் சுழற்சி முறை போராட்டம் இடம்பெற்று வருகிறது.

இதற்கு வலுச் சேர்க்கும் முகமாக நேற்று வியாழக்கிழமை கிழக்கு பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட தமிழ் மாணவர்கள், போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அவர்களது நீண்ட கால மேய்ச்சல் தரை பிரச்னைக்கு நிரந்தர தீர்வு பெற்றுத் தருமாறு அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்தனர்.

கிழக்கு பல்கலைக்கழக முன்றலில் வியாழக்கிழமை காலை ஒன்றுகூடிய மாணவர்கள் கோஷங்களை எழுப்பிய வாறும் பதாதைகளை ஏந்தியவாறும் பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு ஊர்வலமாக வந்து அவர்களுடன் இணைந்து கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். வீதியில் நின்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அம்பிட்டிய தேரரை கைது செய், அடக்காதே, அடக்காதே காவி உடை கொண்டு அடக்காதே, வேண்டும், வேண்டும் நீதி வேண்டும், கைது செய், கைது செய் சூழ்ச்சிக்காரரை கைது செய், என்பன போன்ற கோஷங்களை ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டோர் எழுப்பினார்கள்.

இந்தப் போராட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், ப. அரியநேத்திரன், ஞா. சிறிநேசன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளர் த. சுரேஷ் ஆகியோர்கள் கலந்து கொண்டு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். (ஐ)

## பௌத்த....

நிர்மலா சீதாராமன் மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே உள்ளிட்ட குழுவின ரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினரும் நேற்று பேச்சில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று வியாழக்கிழமை இரவு இந்த சந்திப்பு நடைபெற்றது. (ஐ)

## வடக்கு....

குறிப்பிட்டார்.

நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், 9 மாகாணங்களையும் உள்ளடக்கிய சுகாதார மற்றும் கல்வித் துறைக்கு ஒன்பது பில்லியன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். சுகாதார துறைக்கு 450 கோடி ரூபாய் வழங்கப்படும். அடுத்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் அந்தந்த மாகாணங்களின் சுகாதார பிரச்னைகளைத் தீர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

அந்த மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மேலும் 450 கோடி ரூபாயை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படும் இத்திட்டம் ஆறு மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், மாகாண சபைகளுக்கு உட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் நிரந்தரமற்ற 8,400 ஊழியர்களை நிரந்தரமாக்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் அவர்கள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அவர்கள் சுமார் 15 வருடங்களாக சேவையில் இருப்பவர்கள். மாகாண சபைகளில் 10 ஆயிரம் பணியாளர்களின் வெற்றிடங்கள் இருந்தன - என்றும் கூறினார். (ஐ)

## 17பல்கலை....

யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

## வடக்கு மருத்துவர்...

ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் உரிய தரப்பால் மேற் கொள்ளப்படாத நிலையில் நாம் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இன்று முன்னெடுக்கப்படவுள்ள இந்த ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தின்போது வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச மருத்துவமனைகளிலும் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் நடைபெறமாட்டாது.

மற்றும் மகப்பேற்று மருத்துவ சேவைகள், சிறுவர் மருத்துவ சேவைகள், புற்றுநோய் சிகிச்சைகள், சிறுநீரக செயலிழப்புக்கான சிகிச்சைகள் நடைபெறும்.

அரசாங்கமானது எமது முன்மொழிவுகளினூடாக தற்சமயம் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க முன் வர வேண்டும். அவ்வாறு தீர்வை வழங்கி மருத்துவர்களை நாட்டில் தக்க வைத்து இலவச சுகாதார சேவையை பேணுவதற்கு தவறும் பட்சத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் ஆகிய நாங்கள் நமது போராட்டத்தை தீவிர படுத்த வேண்டி ஏற்படும் - என்றுள்ளது. (அ-ஐ-03)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு மீண்டும் வங்கிக் கடன் சலுகைகள்!

### ஜனாதிபதி ரணில் கூறுகிறார்



கொழும்பு, நவ. 03

இலங்கையின் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு வங்கிக் கடன் சலுகைகளை வழங்க உத்தேசித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு-தாமரை தடாக அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான தேசிய கைத்தொழில் சிறப்பு விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாடு கடந்த காலங்களில் எதிர்நோக்கிய பாரிய பொருளாதார நெருக்கடிகள் மீண்டும் ஏற்படாத வாறு தவிர்த்துக்கொள்வதே தனது முதல் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில், மக்களின் தேவையறிந்து காலத்திற்கு ஏற்ற சரியான தீர்மானங்களை தான் எடுப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

## மரண அறிவித்தல்



### நாகரட்ணம் இரவீந்திரன்

இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தோட்டத்து வளவு, வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் இரவீந்திரன் நேற்று (02.11.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் – சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் – தெய்வானை தம்பதியரின் மருமகனும் செல்வமணியின் அன்புக்கணவரும் நிர்மல், அபர்ணா, சதீஸ், ஆர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரேவதி, பிரபாகரன், துஸ்ஷானி, ஜனார்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷன், பிரிபீஷன், பிரிஷிகா, பிரவினாஸ், அத்ரிகா, அம்ரிதா, அதிதிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் பாலசுப்பிரமணியம், கலாவதி, சோல்பரி, சந்திரவதி, கேஸ்வரலோலன், றமேஸ் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.11.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோட்டத்துவளவு, வதிரி,
கரவெட்டி

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு :
நிர்மல் (மகன்) - 077 798 3062
சதீஸ்(மகன்) - 077 844 8368

# சீனாவின் சினோபெக் நிறுவனத்தின் கீழ் அம்பாந்தோட்டையில் சுத்திகரிப்பு ஆலை

## அடுத்த இரு வாரங்களில் ஒப்பந்தம் பூர்த்தி

கொழும்பு, நவ. 02

**சீனாவின் சினோபெக் நிறுவனம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் அம்பாந்தோட்டையில் ஒரு சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணிக்கவுள்ளது.**

**இதற்கான ஒப்பந்தம் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் ஒப்பந்தம் முடிவடையவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

போட்டி ஏலச் செயல்பாட்டில் பங்கேற்கும் எந்தவொரு நிறுவனத்துக்கும் இது திறந்திருக்கும் என்று அரசாங்கம் கூறினாலும், அந்த நிறுவனத்திற்கு இந்தத் திட்டம் வழங்கப்படும் என்பது அரசியல் வட்டாரங்களில் ஒரு முன்கூட்டிய முடிவாகவே இருந்தது என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக, மற்றொரு சீன முதலீடான கொழும்பு போர்ட் சிட்டி, இலங்கையில் மிகப்பெரிய நேரடி முதலீட்டு திட்டமாக இருந்தது. சினோபெக் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யும், ஆனால் சுத்திகரிப்பு நிலையத்தின் பிற தொடர்புடைய வளர்ச்சிகளில் பின்னர் அதிக பணம் செலுத்தும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சீனாவின் நிதியுதவியுடன் அம்பாந்தோட்டையில் ஆழ்கடல் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டது. இருப்பினும், துறைமுகம் 2017 ஆம் ஆண்டில் சீன அரசுக்கு சொந்தமான 'சீனா மெர்ச்சன்ட்ஸ்' நிறுவனத்திற்கு 99 ஆண்டுகளுக்கு 1.12 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது.

அண்மையில் சீன விஜயத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சினோபெக் குழுமத்தின் தலைவர் மா யோங்ஷெங் மற்றும் உயர் அதிகாரிகளுடன் கடந்த வாரம் பெய்ஜிங்கில் பேச்சுவார்த்தை நடத்தினார். சினோபெக் ஏற்கனவே இலங்கையின் சில்லறை எரிபொருள் சந்தையில் நுழைந்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கான ஒரே போட்டியாளரான விட்டோல் சிங்கப்பூர் போட்டியிலிருந்து விலகியதால், சினோபெக் திட்டத்தில் எளிதாக நுழைந்தது. (அ)

# யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 03

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களினால் வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதோடு, பல்கலைக்கழக முன்றலில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று மதியம் 12 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் இந்த கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

சம்பளப் பிரச்னை மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியில் உள்ள குறைபாடு போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




சொத்துக் கடனில் பாராபட்சம் வேண்டாம், பல்கலைக்கழக ஊழியர்களின் இல்லாமலாக்கப் பட்ட சம்பள அதிகரிப்பை உடனடியாக வழங்கு, கல்விசாரா ஊழியர்களின் பிணக்குகளுக்கு உடனடியாக தீர்வை வழங்கு போன்ற சுலோகங்களை தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

## காஸாவில் இருந்து 17 இலங்கையர்கள் வெளியேற அனுமதி

கொழும்பு, நவ. 03

ரபா எல்லை ஊடாக காஸாவில் இருந்து வெளியேறுவதற்கு 17 இலங்கையர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காஸா எல்லை ஊடாக வெளியேற்றம் தொடர்பான அதிகார சபை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. நேற்று எகிப்துக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படும் 15 நாடு களைச் சேர்ந்த 596 பேரின் பெயர் விவரங்கள் வெளியாகின.

இவர்களில் 17 இலங்கையர்களின் பெயர் விவரங்களும் காணப்பட்டன. (அ)

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்து மோசடியாக பதிவு செய்யப்பட்ட ஜீப்!

## முன்னாள் அமைச்சர் ஒருவர் சிக்குவார்

கொழும்பு, நவ. 03

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான ஜீப் வண்டியை போலி ஆவணங்களைத் தயாரித்து பதிவு செய்து விற்பனை செய்ய முற்பட்ட முன்னாள் அமைச்சர் ஒருவரை கைது செய்ய பாணந்துறை வலன ஊழல் ஒழிப்புச் செயலணியினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம், முன்னாள் அமைச்சர் மற்றும் வாகன விற்பனை நிறுவன முகாமையாளருக்கு சொந்தமான ஒரு கோடி ரூபா பெறுமதியான ஜீப்பை லஞ்ச ஒழிப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

வாகன விற்பனை நிலைய முகாமையாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, முன்னாள் அமைச்சர் செய்த மோசடி தெரியவந்துள்ளதுடன், முன்னாள் அமைச்சரின் மற்றுமொரு மோசடி வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த ஜீப்பை விற்பனை செய்த மத்திய மாகாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவருக்கும் அதே மாகாணத்தில் உள்ள விசேட வைத்திய நிபுணர் ஒருவருக்கும் எதிராகவும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

2008ஆம் ஆண்டு இந்த ஜீப்பை சட்டவிரோதமான முறையில் முன்னாள் அமைச்சர் இலங்கைக்கு இறக்குமதி செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர் போலி ஆவணங்களைத் தயாரித்து பதிவு செய்து 2022ஆம் ஆண்டு வரை பயன்படுத்தியுள்ளார்.

பின்னர், 2022 ஆம் ஆண்டில், வாகனம் இரகசியமாக விற்க கார் விற்பனையாளர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஜீப்புக்கு போலி ஆவணங்களை தயாரித்து பதிவு செய்த மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவும் கைது செய்யப்படவுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நியூசிலாந்தை இலகுவாக வீழ்த்தியது தென்னாபிரிக்கா!




புனே, நவ. 03

உலகக்கிண்ணத் தொடரின் 32ஆவது லீக் போட்டியில் பலம்வாய்ந்த நியூஸிலாந்து அணியை எளிதில் வீழ்த்தி தென்னாபிரிக்க அணி 190 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் புள்ளிப் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது.

புனேவில் நடந்த இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. இதன்படி களம் கண்ட தென்னாபிரிக்காவுக்கு அணித் தலைவர் பவுமா 24 ஓட்டங்கள் எடுத்து சுமாரான தொடக்கமே கொடுத்தார். என்றாலும் மற்றொரு ஆரம்ப வீரர் குயின்ரன் டி கொக் தனது அபார ஆட்டத்தை இந்தப் போட்டியிலும் தொடர்ந்தார்.

அவருடன் வான் டெர் டுசென் இணைய இருவரும் சேர்ந்து நியூஸிலாந்தின் பந்துவீச்சை பதம் பார்த்தனர். 38 ஓட்டங்களுக்கு இணைந்து இக்கூட்டணி 200 ஓட்டங்கள் இணைப்பாட்டம் மூலம் சேர்த்தனர்.

டி கொக் இந்த உலகக் கிண்ணத் தொடரில் நான்காவது சதத்தை பதிவு செய்த நிலையில் 114 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் வான் டெர் டுசென் 133 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, டேவிட் மில்லர் 53 ஓட்டங்கள் எடுத்து விக்கெட்டை இழந்தார். இறுதியில் நிர்ணயிக்க 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 357 ஓட்டங்கள் குவித்தது தென்னாபிரிக்கா. நியூஸிலாந்து சார்பில் ரிம் சவுதி அதிகபட்சமாக 2 விக்கெட் எடுத்தார்.

358 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை துரத்திய நியூஸிலாந்து அணிக்கு நாள் நல்லதாக அமையவில்லை. அந்த அணியின் முன்னணி வீரர்கள் பலரும் சொதப்பினர். சகலதுறை வீரர் க்ளென் பிலிப்ஸ் மட்டுமே பொறுப்பாக விளையாடி 60 ஓட்டங்கள் சேர்த்தார். வில் யங் 33 ஓட்டங்களும் டேரில் மிட்செல் 24 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற 8 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேறினர். இதில் இரண்டு டக் அவுட்கள் அடக்கம்.

தென்னாபிரிக்க வீரர்கள் மார்கோ ஜான்சன், கேசவ் மகராஜ் மற்றும் ஜெரால்ட் கோட்ஸி சிறப்பாக பந்துவீசி நியூஸிலாந்து வீரர்களை சாய்த்தனர். இதனால், 35.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்த நியூஸிலாந்து அணி 167 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து உலகக் கிண்ணத் தொடரில் தொடர்ச்சியாக மூன்றாவது தோல்வியை சந்தித்தது.

இதேநேரம், 190 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா நடப்பு தொடரில் 6ஆவது வெற்றியுடன் புள்ளிப் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது.

தென்னாபிரிக்கா தரப்பில் கேசவ் மகராஜ் 4 விக்கெட், மார்கோ ஜோன்சன் 3 விக்கெட், கோட்ஸி 2 விக்கெட் வீழ்த்தினர். (ஐ)

## பாரிஸ் மாஸ்ரர்ஸ் ரென்னிஸ் அல்கராஸ், மெத்வதேவ் தோல்வி!

பாரிஸ், நவ. 03

பிரான்ஸில் நடைபெறும் பாரிஸ் மாஸ்டர்ஸ் ஆடவர் ரென்னிஸ் போட்டியில் முன்னணி வீரர்களான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், ரஷ்யாவின் டேனியல் மெத்வதெவ் அதிர்ச்சி தோல்வி கண்டனர்.

தரவரிசை அடிப்படையில் நேரடியாக 2ஆஆவது சுற்றில் களம் கண்ட உலகின் 2ஆம் நிலை வீரரான அல்கராஸ் 3-6, 4-6 என்ற செற்களில் ரஷ்யாவின் ரோமன் சஃபியுலினிடம் வீழ்ந்தார். 3ஆஆம் நிலை வீரரான மெத்வதெவ் 3-6, 7-6 (7/4), 6-7 (2/7) என்ற செற்களில் பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவிடம் தோல்வி கண்டார்.

போட்டித் தரவரிசையில் 5ஆம் இடத்திலிருக்கும் அந்த்ரே ரூபலேவ் 6-4, 6-3 என்ற செற்களில் ஜப்பானின் யோஷிஹிடோ நிஷியோகாவை சாய்த்தார். 7ஆம் இடத்திலிருக்கும் கிரீஸின் ஸ்டெபோனோஸ் சிட்சிபாஸ் 6-3, 7-6 (7/4) என்ற செற் கணக்கில் கனடாவின் பெலிக்ஸ் அகர் அலியாசிமேவை வெளியேற்றினார். (ஐ)





## உலகக் கிண்ணத்துடன் விடைபெறுகிறார் வில்லி!




பெங்களூர், நவ. 03

உலகக் கிண்ணத் தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக இங்கிலாந்து வீரர் டேவிட் வில்லி அறிவித்துள்ளார். அடுத்த ஆண்டுக்கான வீரர்களின் ஒப்பந்தத்தில் அவரின் பெயரை இங்கிலாந்து கிரிக்கெட் சபை சேர்க்காததை அடுத்து ஓய்வு முடிவை எடுத்துள்ளார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணி தோல்விகளை சந்தித்துவரும் நிலையில், இந்தத் தொடரில் சில இங்கிலாந்து வீரர்கள் மட்டுமே சிறப்பாக செயல்பட்டனர். அவர்களில் டேவிட் வில்லியும் ஒருவர். உலகக் கிண்ணத்தில் மூன்று போட்டிகளில் மட்டுமே விளையாடி இதுவரை ஐந்து விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

எனினும், கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கான இங்கிலாந்து வீரர்கள் ஒப்பந்தத்தில் வில்லியின் பெயர் இடம்பெறவில்லை. இதையடுத்து ஓய்வுபெற போவதாக அறிவித்துள்ளார்.

தனது இன்ஸ்ட்ராகிராமில், ”ஓய்வு நாள் வருவதை நான் ஒருபோதும் விரும்பவில்லை. சிறுவயதில் இருந்தே எனது ஒரே கனவு, இங்கிலாந்துக்காக கிரிக்கெட் விளையாட வேண்டு என்பதே. எனவே, கவனமாக சிந்தித்து இந்த முடிவை எடுத்துள்ளேன். சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து நான் ஓய்வுபெறும் நேரம் வந்துவிட்டது. உலகக் கிண்ணத்தில் எங்கள் அணியின் செயல்பாட்டிற்கும் எனது இந்த முடிவுக்கும் எந்த சம்பந்தமுமில்லை” என்று பதிவிட்டுள்ளார்.

இங்கிலாந்து அணிக்காக இதுவரை 70 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 94 விக்கெட்களையும், 43 ரி - 20 போட்டிகளில் விளையாடி 51 விக்கெட்களையும் வில்லி வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## விபத்தில் சிக்கினார் ஆஸியின் மக்ஸ்வெல்

அகமதாபாத், நவ. 03

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் க்ளென் மக்ஸ்வெல் வாகனத்திலிருந்து தவறி விழுந்து விபத்தில் சிக்கினார். இந்த விபத்தில் தலையில் காயம் அடைந்த அவருக்கு மூளை அதிர்ச்சி ஏற்பட்டது என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதனால் வரும் திங்கட்கிழமை அகமதாபாத்தில் நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் மக்ஸ்வெல் பங்கேற்க மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

“அகமதாபாத்தில் இருந்து ஹோட்டலில் உள்ள அணியுடன் இணைவதற்காக வாகனத்தில் திரும்பிய போது ஏற்பட்ட விபத்தில், அவர் வாகனத்திலிருந்து தவறி விழுந்தார்.

இதன்போது, அவருக்கு தலையில் அடிபட்டது. இதில் சிறிய அளவில் மூளையதிர்ச்சி ஏற்பட்டது. அதற்கான சிகிச்சையில் உள்ளார். எனவே, அவர் துரதிர்ஷ்டவசமாக இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தை இழக்க நேரிடும். எனினும், வேறு எந்த காயமும் ஏற்படவில்லை என்பதில் சற்று மகிழ்ச்சியே” என்று அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் ஆண்ட்ரூ மெக்டொனால்ட் விபத்து தொடர்பாக பேசியுள்ளார்.

இதனிடையே, மக்ஸ்வெல் ஆறு முதல் எட்டு நாட்களுக்கு சிகிச்சையில் இருப்பார் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. உலகக் கிண்ணத்தின் தொடக்கத்தில் தோல்விகளைச் சந்தித்த அவுஸ்திரேலியா, நெதர்லாந்தை வீழ்த்தி வெற்றிப் பாதைக்கு திரும்பியது. நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் 40 பந்துகளில் சாதனை சதம் அடித்த மக்ஸ்வெல் அணியின் முக்கிய வீரராக திகழ்ந்துவருகிறார். அரையிறுதிக்கு முன்னேறும் முனைப்பில் இருக்கும் அவுஸ்திரேலிய அணியில் மக்ஸ்வெல் இல்லாதது சற்று பின்னடைவை ஏற்படுத்தலாம். (ஐ)

## 100ஆவது போட்டியில் களமிறங்கிய ரஷித் கான்!

டில்லி, நவ. 03

நூறு ஒருநாள் போட்டிகளில் விளையாடிய நான்காவது ஆப்கானிஸ்தான் வீரர் என்ற பெருமையை ரஷித் கான் பெற்றுள்ளார்.

உலகக் கிண்ணத்தில் ஆப்கான் - இலங்கை அணிகள் மோதிய போட்டியே அவரின் 100ஆவது போட்டியாக அமைந்தது. இந்தப் போட்டியில் இலங்கையை 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அபார வெற்றி பெற்றது.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தான் பெற்ற 3ஆவது வெற்றி இதுவாகும்.

ஆப்கானிஸ்தான் அணிக்காக 100 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய வீரர்கள் முகமது நபி - 153 போட்டிகள், அஸ்கர் ஆப்கான் - 114 153 போட்டிகள், ரஹ்மத்ஷா - 103 153 போட்டிகள், ரஷித் கான் - 100 போட்டிகள்.



# காஸாவுக்காக இஸ்ரேலின் உறவைத் துண்டித்த நாடு!
# இந்திய கேரளாவில் ஹமாஸுக்கு ஆதரவாக பேரணி!!



காஸாவில் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேலுடனான அரசுமுறை உறவுகளை தென்னமெரிக்க நாடான பொலிவியா துண்டித்திருக்கிறது.

காஸாவில் "ஆக்கிரமிப்பு மற்றும் சமமற்ற" ராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்த முடிவை எடுத்திருப்பதாக பொலிவியா தெரிவித்துள்ளது.

பொலிவியா போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்ததாகவும், முற்றுகையிடப்பட்ட காஸா பகுதிக்கு உதவிகளை வழங்குவதாகவும் அந்த நாடு தெரிவித்துள்ளது.

போரில் இஸ்ரேலுடனான உறவை துண்டித்த முதல் லத்தீன் அமெரிக்க நாடு இதுவாகும்.

இந்த நடவடிக்கை "பயங்கரவாதத்திற்கு சரணடைவது" என்று இஸ்ரேல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். "ஹமாஸ் பயங்கரவாத அமைப்புடன் தன்னை இணைத்துக் கொள்கிறது" என்று பொலிவியா மீது லியோர் ஹையாட் குற்றம் சாட்டினார்.

"காஸாவில் நடைபெறும் ஆக்கிரமிப்பு மற்றும் சமமற்ற இஸ்ரேலிய ராணுவத் தாக்குதலை நிராகரித்தும், கண்டித்தும் உறவுகளை துண்டிக்கும் முடிவை அரசாங்கம் எடுத்துள்ளது" என்று பொலிவியாவின் வெளியுறவுத் துறை துணை அமைச்சர் ஃப்ரெடி மமானி கூறினார்.

'உணவு, தண்ணீர், வாழ்க்கைக்கு தேவையான பிற பொருள்கள் நுழைவதை" தடுக்கும் இஸ்ரேலின் முற்றுகைக்கு முடிவு கட்ட பொலிவியா விரும்புவதாக அவர் மேலும் கூறினார்.

காஸா மீது பல வாரங்களாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. எனினும் அத்தியாவசிய உதவிகள் எகிப்தின் ரஃபா வழியாக மட்டுமே மக்களைச் சென்றடைகின்றன.

"பொலிவியாவின் பயங்கரவாத ஆதரவையும், அதற்கு ஆதரவு தரும் ஈரானுக்கு அடிபணிவதையும் இஸ்ரேல் கண்டிக்கிறது." என்று ஹையட் பதிலளித்தார்.

அக்டோபர் 7-ம் தேதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஹமாஸுக்கு ஆதரவு அளித்ததாக ஈரான் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஈரான் தலைவர்கள் இதைக் கொண்டாடினாலும், அதில் தங்களுக்குத் தொடர்பில்லை என்றே கூறிவருகின்றனர்.

இஸ்ரேலுக்கு எதிராக ராஜதந்திர நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கிய லத்தீன் அமெரிக்க நாடு பொலிவியா மட்டுமல்ல.

சிலியின் அதிபர் கேப்ரியல் போரிக் செவ்வாயன்று டெல் அவிவில் உள்ள நாட்டின் தூதரை ஆலோசனைக்காக திரும்பப் பெறுவதாகக் கூறினார்.

"காஸா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் ஏற்றுக்கொள்ள முடியாத மீறல்களைக் கருத்தில் கொண்டு." இதைச் செய்வதாக அவர் கூறியிருந்தார்.

'இந்த ராணுவ நடவடிக்கைகளை சிலி கடுமையாக கண்டிக்கிறது மற்றும் மிகுந்த கவலையுடன் உற்றுநோக்குகிறது. காஸாவில் உள்ள பாலஸ்தீன குடிமக்கள் கூட்டுத் தண்டனை அனுபவிக்கும் நிலையை இது ஏற்படுத்தியுள்ளது," என்று அவர் தனது எக்ஸ் சமூக வலைத்தள பக்கத்தில் எழுதியுள்ளார்.

கொலம்பிய அதிபர் குஸ்டாவோ பெட்ரோ சமூக ஊடகங்களில் இதேபோன்ற அறிவிப்பை வெளியிட்டார்.

"இஸ்ரேலில் உள்ள எங்கள் தூதரை ஆலோசனைக்கு அழைக்க நான் முடிவு செய்துள்ளேன்," என்று பெட்ரோ கூறினார்.

"பாலத்தீன மக்களின் படுகொலையை இஸ்ரேல் நிறுத்தாவிட்டால் நாங்கள் அங்கு இருக்க முடியாது." என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவும் போர் நிறுத்தத்தை வலியுறுத்தினார்.

"கொல்லப்பட்டவர்களில் எண்ணிக்கையில் பெரும்பாலானோர் குழந்தைகளாக இருக்கும் ஒரு போரை முதல் முறையாக நாங்கள் காண்கிறோம். நிறுத்துங்கள்! கடவுளின் அன்பிற்காக, நிறுத்துங்கள்! " என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட நாடு

தென் அமெரிக்காவின் மிக உயரமான பகுதியில் இருக்கும், மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட நாடு பொலிவியா. நான்கு புறமும் நில எல்லைகளால் சூழப்பட்ட நாடாக பொலிவியா அமைந்துள்ளது. 1538 ஆம் ஆண்டு ஸ்பெயின் இந்நாட்டைக் கைப்பற்றியது. 1824 ஆம் ஆண்டு வெனிசுலாவின் விடுதலைப் போராளி சைமன் பொலிவார் ஸ்பானிய ஆட்சியிலிருந்து இந்நாட்டை விடுவித்தார்.



ஒரு வருடம் கழித்து, பொலிவியா சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. அந்நாட்டின் முதல் அதிபராக சைமன் பொலிவார் பதவியேற்றார். பொலிவியா அவருடைய பெயரால் அழைக்கப்படுகிறது.

இந்த நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பகுதி பழங்குடியினர் ஆவர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு உள்ளனர்.

தென் அமெரிக்காவில் பொலிவியா இரண்டாவது பெரிய இயற்கை எரிவாயு இருப்பு உள்ள நாடாக உள்ளது, ஆனால் இந்த வாயுவைப் பிரித்தெடுத்தல் மற்றும் ஏற்று




மதி குறித்து நீண்ட காலமாக பலதரப்புகளுக்கு இடையே பதற்றம் நிலவி வருகிறது.

பழங்குடியினர் குழுக்கள் நாட்டில் உள்ள இயற்கை வளங்களின் கட்டுப்பாட்டை விட்டுக் கொடுக்கக்கூடாது என்று கூறுகின்றனர். இதை பொலிவியாவில் மீதமுள்ள ஒரே இயற்கை வளமாக அவர்கள் பார்க்கிறார்கள்.

உலக அளவில் கோகா உற்பத்தியில் பொலிவியா முன்னிலை வகிக்கிறது. இது கோகைன் என்ற போதைப் பொருளுக்கான மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது. இந்த நாடு இந்த பயிர் விளைவிப்பதை எதிர்த்து ஒரு பிரசாரத்தை தொடர்ந்து நடத்திவருகிறது. ஆனால், பொலிவியாவில் உள்ள ஏழை விவசாயிகள் இந்த பிரசாரத்தை எதிர்க்கின்றனர். ஏனெனில் இதுவே அவர்களின் வருமானத்திற்கான ஒரே ஆதாரமாக விளங்குகிறது.

பொலிவியாவின் தற்போதைய அதிபர் லூயிஸ் ஆர்ஸ் 2020 அக்டோபரில் பதவியேற்றார். அவருக்கு முன், எதிர்க்கட்சித் தலைவர் ஜனின் அனஸ் 2019 ஆம் ஆண்டு நவம்பரில் சர்ச்சைக்குரிய தேர்தலுக்குப் பிறகு அதிபர் எவோ மோரல்ஸ் பதவி விலகியபோது தற்காலிக அதிபராக தன்னைத் தானே அறிவித்துக்கொண்டார்.

### இந்தியாவின் கேரளாவில் பேரணி

இதேவேளை, கேரளாவில் பாலத்தீனத்துக்கு ஆதரவாக ஜமாத் - இ - இஸ்லாமி அமைப்பின் ஒற்றுமை இளைஞர் இயக்கம் நடத்திய பேரணியில், ஹமாஸ் ஆயுதக்குழு தலைவர் வீடியோ வாயிலாக பேசியது இந்தியாவில் பேசுபொருளாகியுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பாலத்தீன ஆயுதக்குழுவான ஹமாஸ் இடையே, கடந்த இருபது நாட்களுக்கும் மேலாக போர் நடைபெற்று வருகிறது. இதில் பல ஆயிரம் பேர் இறந்துள்ளனர். இந்தியாவின் பல மாநிலங்களில் இஸ்லாமிய அமைப்புகள் மட்டுமின்றி பல அமைப்புகள் பாலத்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இப்படியான நிலையில், கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில், கேரளாவின் ஜமாத் - இ - இஸ்லாமி ஹிந்த் அமைப்பின் கீழ் செயல்படும் ஒற்றுமை இளைஞர் இயக்கம் நடத்திய பேரணியில், ஹமாஸ் ஆயுதக்குழுவின் முன்னாள் தலைவர் கலீத் மெஷால் வீடியோ வாயிலாக பேசியது, நாடு முழுவதிலும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

பா.ஜ.கவின் மூத்த தலைவர்கள் பலரும் இதற்கு கண்டனத்தை பதிவு செய்துள்ளனர். கேரளாவின் மலப்புரத்தில் என்ன பேரணி நடந்தது, அதில் கலீத் மெஷால் பேசியது என்ன? சர்ச்சைகளுக்கு பேரணி நடத்தியவர்



கள் மற்றும் கேரள முதல்வர் பினராயி விஜயனின் விளக்கம் என்ன?

### கலீத் மெஷால் பேசியது என்ன?

கேரளாவின் ஜமாத் - இ - இஸ்லாமி ஹிந்த் அமைப்பின் கீழ் செயல்படும் ஒற்றுமை இளைஞர் இயக்கம் கேரளாவின் பல பகுதிகளில் பாலத்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்து, 'இந்துத்துவா மற்றும் நிறவெறி சியோனிஸத்தை வேரோடு அகற்றுவோம்' என்ற தலைப்பில் பேரணிகள் நடத்தி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக அக்டோபர் 27ம் தேதி பேரணி ஒன்று நடைபெற்றது. இதில், பாலத்தீனத்தின் ஹமாஸ் ஆயுதக்குழுவை சேர்ந்த தலைவர்களான இஸ்மாயில் ஹனியா மற்றும் கலீத் மெஷால் பேசுவார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பேரணியின் போது, அங்கு அமைக்கப்பட்டிருந்த திரையில் வீடியோ வாயிலாக தோன்றிய, கலீத் மெஷால் அரபு மொழியில் பேசினார்.

### 'அல் அக்ஸாவுக்காக போராட்டம்'

வீடியோவில் பேசிய கலீத் மெஷால், "இந்தியா மற்றும் கேரளா முழுவதிலும் இருந்து காஸாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் அனைவருக்கும் வணக்கம். 1967 முதல், அல் அக்ஸா (மசூதி) இடிந்து விழும் நிலையில் உள்ளது. நெதன்யாகுவின் நிழலில் ஆட்சி அமைத்ததில் இருந்து, தீவிர வலதுசாரிக்கட்சிகள், அல் அக்ஸாவை அழிக்க முயன்று வருகின்றனர். அக்ஸா மசூதியை இடித்துவிட்டு தாங்கள் கூறும் கோவிலைக் கட்டுவதற்கான ஆயத்தங்களை ஆரம்பித்திருந்தார்கள்."

"காஸாவிலுள்ள உங்கள் சகோதரர்கள் கடந்த அக்டோபர் 7ம் தேதி முதல் அக்ஸாவிற்காக போராடி வருகின்றனர். மூன்று வார ராணுவ தோல்வியை சந்தித்த இஸ்ரேல் எங்கள் குடியிருப்பாளர்களை பழிவாங்குகிறது. வீடுகள் இடிக்கப்படுகின்றன, காஸாவின் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகளை அழித்துள்ளனர். தேவாலயங்கள், கோவில்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஐ.நா நிறுவனங்களையும் கூட அவர்கள் அழித்து வருகின்றனர். இந்தத் தாக்குதல்களின் அர்த்தம் என்னவென்றால் காஸாவை காலி செய்ய வைப்பது தான்," என்றார்.

### பா.ஜ.க தலைவர்கள் கண்டனம்

இதனைத்தொடர்ந்து, பா.ஜ.கவின் முக்கிய தலைவர்கள், இந்த பேரணியையும், கேரள மாநில கம்யூனிஸ்ட் அரசையும் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

கேரள பா.ஜ.க மாநிலத்தலைவர் கே.சுரேந்திரன், "மலப்புரத்தில் ஹமாஸ் தலைவர் உரையாற்றிய சம்பவம் கவலையளிக்கிறது. பாலத்தீனத்தை காப்பாற்றுங்கள் என்ற போர்வையில், ஹமாஸ் என்ற அமைப்பையும் அதன் தலைவர்களையும் போர்வீரர்கள் என்று போற்றுகின்றனர் இது ஏற்றுக்கொள்ள முடியாதது," எனப்பேசியிருந்தார்.

பா.ஜ.க தேசியத்தலைவர் ஜே.பி.நட்டா, "கேரளாவில் முதல்வர் பினராயி விஜயன் தலைமையிலான இடது ஜனநாயக கூட்டணி, தீவிரவாத செயல்கள் மீது மெத்தனப்போக்கை கடைபிடிப்பதால், சட்டம் ஒழுங்கு சீர்குலைய காரணமாக உள்ளது," என, பேசியிருந்தார்.

### கேரள முதல்வரின் விளக்கம் என்ன?

பா.ஜ.க தலைவர்களின் தொடர் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்துள்ளார் கேரள முதல்வர் பினராயி விஜயன்.

கொச்சியில் நிருபர்களை சந்தித்த பினராயி விஜயன், "பா.ஜ.க கூறுவதைப்போல், பாலத்தீனத்துக்கு ஆதரவாக நடந்த பேரணியில் பங்கேற்றவர்களை கைது செய்வதெல்லாம் கேரளாவில் நடக்காத ஒன்று. நாங்கள் (கேரளா) எப்போதும் பாலத்தீனத்துக்கு ஆதரவாக நின்றோம். நாடும் பாலத்தீனத்துக்கு ஆதரவாக இருந்தது. இப்போது அந்த நிலைப்பாட்டில் சில விலகல் உள்ளது."

"கேரளாவில் அனைத்து அமைப்புகளுக்கும் பொலீஸார் அனுமதி வழங்குகிறார்கள். ஜமாத் - இ - இஸ்லாமி கூட்டம் நடத்த அனுமதி கேட்டால், போலீஸ் அனுமதி தருவது வழக்கம். ஜமாத் - இ - இஸ்லாமி அமைப்பின் கூட்டத்தில், ஹமாஸ் தலைவர் பேசியது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வீடியோ. அவர் பேசியதை பொலீஸார் முழுமையாக விசாரிக்கின்றனர், தவறு இருக்கும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்," என விளக்கம் அளித்துள்ளார்.

# ஷி யான் 6: இலங்கையில் சீன கப்பல் செய்யும் ஆய்வு என்ன? இந்தியா எதிர்ப்பது ஏன்?

ரஞ்சன் அருண் பிரசாத்



இலங்கை கடற்பரப்பிற்குள் வருகைத் தந்துள்ள சீனாவின் சமுத்திர ஆராய்ச்சி கப்பலான ஷி யென் 6, தனது ஆய்வு நடவடிக்கைகளை கொழும்பு கடற்பரப்பில் ஆரம்பித்துள்ளது.

இந்த கப்பல் இரண்டு தினங்களுக்கு ஆராய்ச்சிகளை நடத்தி வருவதாக நீரியல் வளங்கள் ஆய்வு அபிவிருத்தி மற்றும் முகவர் நிறுவனம் (நாரா) பிரதான விஞ்ஞானி கணபதிபிள்ளை அருளானந்தன் நேற்று முன்தினம் கருத்து தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த கடல் பிராந்தியத்தில் இந்த ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீரியல் வளங்கள் ஆய்வு அபிவிருத்தி மற்றும் முகவர் நிறுவனம் (நாரா) மற்றும் கடற்படை ஆகியவற்றின் கண்காணிப்புடன் இந்த ஆய்வு நடவடிக்கைகளை சீன விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

வளி மண்டலத்திற்கும், கடலுக்கும் இடையில் இருக்கின்ற தொடர்புகளை ஆராய்வதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம் எனவும் அவர் கூறினார்.

அத்துடன், கடல் நீரோட்டம் தொடர்பிலான ஆய்வுகளும் நடத்தப்படுவதற்கான மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**சீன கப்பலின் இலங்கை வருகை**

சீன சமுத்திர ஆராய்ச்சி கப்பல் கடந்த 25ம் தேதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காகவே இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வருகைத் தந்ததாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும், கொழும்பு மற்றும் அதனை அண்மித்த கடற்பரப்பில் ஆய்வுகளை நடத்துவதற்கு சீன விஞ்ஞானிகளுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, குறித்த கப்பல் 31ம் திகதி முதல் கொழும்பு கடற்பரப்பில் ஆய்வுகளை நடத்தியது.

**சீன கப்பல் வருகைக்கு இந்தியா எதிர்ப்பு**

இலங்கைக்கு ஷி யென் 6 கப்பல் வருகைத் தரவுள்ளதாக வெளியான தகவல்களை அடுத்து, இந்தியா தொடர்ச்சியாக கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தது.

தென் இந்தியாவிலுள்ள மிக முக்கிய இடங்களை இலங்கைக்கு வருகைத் தரும் இந்த கப்பலினால் ஆய்வு செய்ய முடியும் என்ற அச்சத்தின் அடிப்படையிலேயே இந்தியா இந்த கப்பலின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்ததாக ஊடக செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஷி யென் 6 கப்பல் கடந்த 25ம் தேதி நாட்டை வந்தடைந்துள்ளது.

நாட்டை வந்தடைந்த கப்பல் ஆராய்ச்சிகளை நடத்துவதற்காக கோரிக்கையை அரசாங்கத்திடம் விடுத்திருந்தது.

இந்த நிலையிலேயே, இலங்கை அதிகாரிகளின் கண்காணிப்பில் ஆய்வுகளை நடத்த இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்பிரகாரம், குறித்த கப்பல் தற்போது ஆராய்ச்சிகளை நடத்தி வருவதாக நீரியல் வளங்கள் ஆய்வு அபிவிருத்தி மற்றும் முகவர் நிறுவனம் (நாரா) பிரதான விஞ்ஞானி கணபதிபிள்ளை அருளானந்தன் தெரிவித்தார்.

**கப்பலில் எவ்வாறான ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன?**

கொழும்பை அண்மித்த கடற்பரப்பின் 9 இடங்களிலிருந்து சுமார் 2000 மீட்டர் ஆழத்திலுள்ள நீர் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக நீரியல் வளங்கள் ஆய்வு அபிவிருத்தி மற்றும் முகவர் நிறுவனம் (நாரா) பிரதான விஞ்ஞானி கணபதிபிள்ளை அருளானந்தன் குறிப்பிட்டார்.

“குறிப்பிட்ட 9 இடங்களில் நாங்கள் ஆய்வுகளை நடத்தினோம். நீர் மாதிரிகளை எடுத்தோம். இன்னும் ஒரு இடத்தில் மாத்திரம் ஆய்வு செய்யவுள்ளோம். மொத்தமாக 9 இடங்களில் ஆய்வுகள் நடத்தப்பட்டன. கொழும்பை அண்மித்த பகுதிகளிலேயே ஆய்வுகளை நடத்தினோம். 2000 மீட்டர் ஆழம் வரை ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.





கப்பல் மேல் தளத்தில் இருந்து, நீர்மாதிரிகளை பெற்றுக்கொள்வதற்கான உபகரணங்களை பயன்படுத்தி, நீர் மாதிரிகளை பெற்றுக்கொண்டோம். விரும்பிய வெவ்வேறு இடங்களிலிருந்து நீர்மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. 50 மீட்டர், 100 மீட்டர், 200 மீட்டர், 500 மீட்டர், 1000 மீட்டர் மற்றும் 2000 மீட்டர் என நீர் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

எங்களுடைய ஆய்வின் நோக்கம் நீரோட்டங்களை பற்றி ஆராய்வது. கரையோர நீரோட்டங்களினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மற்றும் நன்மைகள் தொடர்பில் ஆராய்கின்றோம். கடல் நீரோட்டம் செல்கின்ற பாதைகளில் தான் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டன.” என கணபதிபிள்ளை அருளானந்தன் தெரிவித்தார்.

இந்த ஆய்வு நடவடிக்கையானது, எந்தவிதத்திலும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது என அவர் குறிப்பிடுகின்றார்.

“கடல் நீர் என்பது, ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு அடித்து செல்லப்படுகிறது. அத்துடன், நீரின் மாதிரிகளை பெற்றுக்கொள்வதனால், எந்தவித பாதிப்பும் ஏற்பட போவதில்லை. அது எந்த வகையிலும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது. இந்த கப்பலில் நீர் மாதிரிகள் மாத்திரமே எடுக்கப்படுகின்றன.” என அவர் பதிலளித்தார்.

சீனாவின் சமுத்திர ஆராய்ச்சி கப்பலின் ஆய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. கப்பலிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகள் பின்னரான காலத்திலேயே ஆய்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் என பிரதான விஞ்ஞானி கணபதிபிள்ளை அருளானந்தன் தெரிவித்தார்.

### நீடிப்பு காலம் முடிவடைந்தது:

# புதிய பொலிஸ் மா அதிபரின் நியமனத்தில் இழுபறி நீடிப்பு

*கொழும்பு, நவ. 03*

பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்ரமரத்னவுக்கு வழங்கப்பட்ட மூன்றாவது சேவை நீடிப்புக் காலம் நேற்றுடன் நிறைவடைந்தது. ஆனால், பொலிஸ்மா அதிபர் பதவிக்கு எவருடைய பெயரும் அரசமைப்பு பேரவைக்கு நேற்றுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.

பொதுவாக, மூன்று பெயர்கள் அரசியலமைப்புப் பேரவைக்கு முன்மொழியப்பட வேண்டும். ஆனால், இதுவரை எவரது பெயரும் முன்மொழியப்படவில்லை.

பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்ரமரத்னவுக்கு மூன்றாவது முறை ஜனாதிபதியால் சேவை நீடிப்பு வழங்கப்பட்ட போது அரசமைப்பு பேரவையின் அனுமதி பெறப்படவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளையும் முன்வைத்திருந்தன.

அவருக்கு வழங்கப்பட்ட முதல் மற்றும் இரண்டாவது சேவை நீட்டிப்புகள் தலா மூன்று மாதங்களாகவும் கடைசி சேவை நீட்டிப்பு மூன்று வாரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், இன்று பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படாவிட்டால், நாளை இரண்டாவது தடவையாக பொலிஸ்மா அதிபர் ஒருவர் இல்லாத சூழ்நிலை நாட்டில் ஏற்படும்.

புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை கடந்த சில நாட்களாக அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. ஆனால், இதுவரை இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மூன்று மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர்களிடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளதாக அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களான தேசபந்து தென்னகோன், லலித் பதிநாயக்க மற்றும் நிலந்த ஜயவர்த்தன ஆகியோரில் ஒருவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது. எனினும், தேசபந்து தென்னகோன் புதிய பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுவதற்கான அதிகமாக உள்ளதாகவும் அறிய வருகின்றது. (ஐ)

# பணவீக்கம் 1.5 வீதம் உயர்ந்தது!

*கொழும்பு, நவ. 03*

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த செப்ரெம்பர் மாதம் 1.3 சதவீதமாக பதிவாகியிருந்த பணவீக்கம், ஒக்ரோபர் மாதத்தில் 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதன்படி, கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 5.2 சதவீதமாகப் பதிவான உணவுப் பணவீக்கம் ஒக்ரோபரில் மாற்றமின்றி அதே மட்டத்தில் காணப்பட்டதுடன், செப்ரெம்பரில் 4.7 சதவீதமாக பதிவான உணவல்லா பணவீக்கம் ஒக்ரோபரில் 4.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மேலும், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம் ஒக்டோபரில் -0.22 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப்பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட - 0.63 சதவீத வீழ்ச்சியும், உணவல்லாப்பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள்,கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட 0.41 சதவீத அதிகரிப்பும் காரணமாக அமைந்துள்ளது.

இதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படைப்பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் பதிவான 1.9 சதவீதத்திலிருந்து ஒக்ரோபரில் 1.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறான பின்னணியில் பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் உறுதியான பணவீக்க எதிர்பார்க்கைகள் மூலம் பணவீக்கமானது நடுத்தரகாலத்தில் 5 சதவீதம் எனும் இலக்கிடப்பட்ட மட்டத்தை அடையுமென எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

(ஐ)



## சாய்ந்தமருது அஸ்ரப் வித்தியாலயத்துக்கு ஐந்து கணினித் தொகுதிகள் அன்பளிப்பு

*அம்பாறை, நவ. 03*

பேருவளையைச் சேர்ந்த ஆசிரியை மர்ஹூமா ஸீனத் நயிமா அமீன் ஞாபகார்த்தமாக அவரின் புதல்வர் எம்.பிராஸினால் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலயத்திற்கு 5 கணனிகள் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டன.

லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய மாணவர்கள் தகவல் தொழிநுட்ப பாடத்தை கற்றுக்கொள்வதற்கு கணினிகள் இல்லாத குறை நீண்ட காலமாக இருந்து வந்தது.

அதனை அடுத்து அதிபர் எம்.ஐ.எம். சம்சுதீன் சாய்ந்தமருது பிரதேசத்தின் கணினி விற்பனையாளர் முஹம்மட் முபீனிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் அவரின் சிபாரிசின் அடிப்படையில் மேற்படி கணினிகள் குறித்த பாடசாலைக்கு கிடைக்கப்பெற்றன.

இக்கணனிகளை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எம். சுஜான் உட்பட பாடசாலையின் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பாடசாலை நலன்விரும்பிகள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

